பக்கங்கள் : 16+II=18

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 20 திங்கட்கிழமை (04.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :220



தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப்.கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக மோட்டார் சைக்கிள் படைப் பிரிவினின் மூன்றாவது அணி பயிற்சியை நிறைவு செய்துள்ளது. இதற்கான நிகழ்வில் தலைவர் பிரபாகரன் பங்கேற்றார். அப்போது அவர் இராணுவ மரியாதையை ஏற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும் தாக்குதல் ஒத்திகைகளை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

# புலிகளுடன் ஒப்பமிட்ட உடன்பாட்டை நாடாளுமன்றத்தில் சமர்ப்பியுங்கள்!

## வற்புறுத்திக் கோருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு,ஜூலை4

**அரசும் புலிகளும் கையொப்பமிட்ட பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டின் வாசகங்களை அப்படியே வரிக்கு வரி தப்பாமல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பியுங்கள். அது தொடர்பான தனது நிலைப்பாட்டை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபையில் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தவும் வேண்டும்.**

**- இப்படிக் கோரியிருக்கிறது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முன்னாள் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி.**

ஜே.வி.பி. விடுத்திருக்கும் இக்கோரிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

நாளை செவ்வாய்க்கிழமை காலை நாடாளுமன்றம் கூடும்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை அங்கு சமர்ப்பித்து தமது நிலைப்பாட்டையும் அங்கு பகிரங்கமாக அறிவிக்கவேண்டுமென முன்னதாக ஜே.வி.பி. எழுத்துமூலம் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஆனாலும், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பில் பிரதமர் இன்னமும் ஒரு தீர்மானத்திற்கு வரவில்லையென்று அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரச நாடாளுமன்றக் குழு இன்று அவசரமாகக் கூடுகிறது

கொழும்பு,ஜூலை4

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம இன்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை மீண்டும் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதா என்பது குறித்து இன்றைய கூட்டத்தின்போது ஆராயப்படும் எனத் தெரிகின்றது.

இன்றைய குழுக்கூட்டத்தில் ஆளுங்கட்சியின அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென ஆளுங்கட்சியின் பிரதம கொரடா

(16ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தின ஊர்திப் பவனி கிழக்கில் நேற்று ஆரம்பமானது

கரும்புலிகள் தினத்தையொட்டி மட்டக்களப்பில் கரும்புலிகளின் உருவப் படங்கள் தாங்கிய ஊர்திப் பவனி நேற்று ஆரம்பமானது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து ஊர்திகளின் பவனி இன்று இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகள் ஊடாகவும் செல்லும் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை 8 மணிக்கு குடும்பிமலைக் கோட்டம் கரடியனாற்றில் இருந்து ஊர்திகளின் பவனி ஆரம்பித்தது. அங்கிருந்து நேற்று மாலை மாவடி முன்மாரிக் கோட்டத்தை வந்தடைந்தது. இன்று பட்டிருப்புக் கோட்டம் ஊடாக பவனி மட்டக்களப்பு நகரை நோக்கிச் செல்லும்.

இறுதியில் அம்பிலாந்துறை பொது விளையாட்டு மைதானத்தை அடைந்ததும் அங்கு எழுச்சி நாள் நிகழ்வு இடம்பெறும்.

ஊர்திப் பவனி செல்லும் இடங்களில் வீரவணக்கக் கூட்டங்களும் இடம்பெற்றன. கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்த ஊர்திப் பவனி இராணுவக் கட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் குழு

யாழ்ப்பாணம்,ஜூலை4

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கென குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இக்குழு ஏற்படுத்தப்பட்டது.

மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி சுபியான் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் முஸ்லிம் மக்களும் யாழ்.மாவட்ட அரசியல்துறையின் ஊடக இணைப்பாளர் இளையவனும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசனும் கலந்துகொண்டனர்.

மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கும், தீர்வுகள் கண்டு நடைமுறைப்படுத்துவதற்குமான குழு அப்போது தெரிவுசெய்யப்பட்டது. இக்குழுவில் வக்பு சபையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிவாசல்களின் நிர்வாகத்தில் இருந்தும் முஸ்லிம் மக்கள் வாழுகின்ற

(16ஆம் பக்கம் பார்க்க)

## குருநகரில் இன்று போராட்டம்!

நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்குச் சென்று திரும்பியபோது குருநகர்ப் பகுதி இளைஞரான அன்ரன் அமலதாஸ் ராஜ்குமார் (வயது 21) படையினரின் சோதனைச் சாவடியில் மின்சாரம் தாக்கிப் பலியான சம்பவத்தைக் கண்டித்தும் -

கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்று திரும்பும் வழியில் உள்ள பாதுகாப்பு வேலிகளை அகற்றும்படி கோரியும் -

இன்று குருநகர் பகுதியில் கடையடைப்பும் மறியல் போராட்டமும் இடம்பெறவுள்ளன. குருநகர் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் ஏற்பாட்டில் இப்போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி குருநகர் சோதனைச் சாவடிப் பகுதியில் மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக குருநகர்ப் பகுதியில் உள்ள கடைகள் மற்றும் சந்தைகள் போன்றவற்றை மூடி ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ஓ)

# தமிழ்த் தேசியப் போராட்டத்தில் ஆகுதியாகிய கரும்புலிகளை நினைவுகூரும் தினம் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை4

ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இன்னுயிரை ஆகுதியாக்கிய கரும்புலிகளின் தற்கொடையை நினைவுகூரும் கரும்புலிகள் தினம் நாளையாகும். இதனைத் தமிழர் தாயகத்தில் மட்டுமன்றி தமிழர்கள் வாழும் நாடுகளெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் இதற்கான ஏற்பாட்டை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது.

மாவீரர் மில்லர் முதல் இன்றுவரை ஆகுதியாகிய கரும்புலி மாவீரர்களின் திருவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்திப் பவனிகள் கோட்ட மட்டத்தில் இன்று ஆரம்பமாகின்றன. நாளை இவை எழுச்சிக் கூட்டங்கள் நடைபெறவுள்ள இடங்களை அடையவுள்ளன.

### வலிகாமம்

வலிகாமம் கோட்ட ஊர்திப் பவனி இன்று நல்லூர், யாழ். நகர வீதியூடாகச் சென்று நாளை வழக்கம்பரையை அடையும் அங்கு எழுச்சிக் கூட்டம் இடம்பெறும்.

### தென்மராட்சி

தென்மராட்சிக் கோட்ட ஊர்திப் பவனி இன்று மீசாலையில் ஆரம்பமாகி சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், மிருசுவில், ஊடாக நாளை மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியை அடையும். அங்கு எழுச்சிக் கூட்டம் நடைபெறும்.

### தீவகம்

தீவகக் கோட்ட கரும்புலிகள் தின எழுச்சிக் கூட்டம் நாளை புளியங்கூடல் முத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் இடம்பெறும்.

### வடமராட்சி

கரும்புலி மில்லர் வீரச்சாவடைந்த வடமராட்சிக் கோட்டத்தில் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வு நடைபெறவுள்ளது. இன்று நெல்லியடிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்திப் பவனி உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மணற்காடு, குடத்தனை, கரவெட்டி, கொற்றாவத்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்







கரும்புலிகள் தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையினரும் கூட்டுறவு அமைப்புகளும் இணைந்து உருவாக்கிய கரும்புலிகள் நினைவு ஊர்தியையும் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவுகளில் ஒன்றையும் படங்களில் காணலாம். *(படம்: நேசன்)*

# தமிழ்மக்கள் நிம்மதியுடன் வாழ்வதற்கு இங்கிருந்து படையினர் வெளியேறவேண்டும்!

## பொது அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை4

சிறிலங்கா இராணுவம் தங்கள் காவலரண்களையும், வேலிகளையும் அகற்றிவிட்டு வெளியேறவேண்டும். இதன் மூலம்தான் தமிழ் மக்கள் நிம்மதியான வாழ்வை வாழமுடியும். - இவ்வாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்குச் சென்று திரும்பிய குருநகர் இளைஞர் ஒருவர் படையினரின் பாதுகாப்பு வேலியில் பாய்ந்த மின்சாரத்தில் சிக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

சிறிலங்கா அரசின் கடல் வலயச் சட்டத்தினால் கரையோர மக்கள் தொழிலிழந்து பாதிக்கப்பட்டுள்ளனர். சிறிய தொழிலையாவது மேற்கொண்டு குடும்பத்தின் சுமைகளை நீக்கவேண்டுமென்ற உயரிய நோக்குடன் கடலுக்குப் புறப்பட்ட இளைஞர் ஒருவர் தொழில் செய்யும் பகுதிகளில் இராணுவத்தினால் திட்டமிட்டு கண்மூடித்தனமாகப் போடப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியில் ஏற்பட்ட மின் ஒழுக்கில் சிக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்செயற்பாடு இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் மறைமுகமான இன ஒழிப்பாகும். இச்செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிறிலங்காப் படைகள் தங்கள் காவலரண்களையும் வேலிகளையும் அகற்றிவிட்டு வெளியேறவேண்டும். இதன் மூலம்தான் இத்தகைய இழப்புகளைத் தடுக்கமுடியும். தமிழ்மக்கள் நிம்மதியான வாழ்வை வாழமுடியும்.

உயிரிழந்த இளைஞனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது என்றுள்ளது. (ஒ-204)

## காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை4

வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் குடும்பங்களிற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் முன்னுரிமை அடிப்படையில் சலுகைகளை வழங்கவுள்ளார் என வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பொதுமக்கள் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, நிரந்தரக் காணி வீடு அற்றவர்களிற்கு உதவிகள் வழங்கும் பொருட்டு, அத்தகையவர்களின் விவரங்களை வழங்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். அதற்கமைவாக நிரந்தரக் காணி, வீடு அற்ற காணாமற்போனோரின் குடும்பங்கள் தமது விவரங்களை எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் அன்னையர் முன்னணித் தலைவியிடம் பதிவுசெய்யும்படி பாதுகாவலர் சங்கம் கேட்டுள்ளது. (ஒ-204)

## துணைப்படை வீரர்கள் நால்வரின் வீரச்சாவு குறித்து புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை4

வீரச்சாவடைந்த தமிழீழத் தேசியத் துணைப் படை வீரர்கள் நால்வரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

14.07.1994 அன்று இராணுவத்தின் பதுங்கித் தாக்குதலின்போது தங்கத்துரை ராஜு (தங்கபுரம் பள்ளிக்குடியிருப்பு) என்பவரும்-

17.12.1998 அன்று இராணுவம் தோப்பூர் பகுதியில் பதுங்கித் தாக்கியபோது சோமசுந்தரம் திருச்செல்வம்(செல்வன் - பள்ளிக் குடியிருப்பு, தோப்பூர்) என்பவரும் -

11.09.1994 அன்று கஜமுந்தன்குளத்தில் இடம்பெற்ற இராணுவத்தினரின் தாக்குதலின் போது தங்கராசா விஜயசுந்தரம் (அழகன் - 4ஆம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர்) என்பவரும் வீரச்சாவடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## மாவீரர் நினைவுக்கல் திரைநீக்கம்

யாழ். வடலியடைப்பு அரசடியில் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் நித்தியா(தங்கராசா சாரதா - கீரிமலை வீதி, சித்தன்கேணி) நினைவாக நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது. முன்னதாக துயிலும் இல்ல நினைவு மண்டபத்தில் மாவீரரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு வீரவணக்க கூட்டம் நடைபெற்றது. (ஒ)

## இ.தொ.காவிலிருந்து பைஸல் விலகினார்

பதுளை,ஜூலை4

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு எம்.பியான சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் பைஸல் முஸ்தபா இ.தொ.காவிலிருந்து பிரிந்துவிட்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானே இதனை நேற்றுப் பகிரங்கமாக அறிவித்தார்.

மலையகத்தில் தற்போது மேற்கொள்ளப் படவிருக்கும் ஆசிரியர் நியமனத்தில் முஸ்லிம்களுக்கும் பங்கு வழங்கவேண்டும் என்று பைஸல் முஸ்தபா வலியுறுத்தினார் எனவும்-

அதற்கு இ.தொ.கா. தலைவர் இணங்க மறுத்ததால் இப்பிளவு நேர்ந்தது எனவும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பைஸல் முஸ்தபா இ.தொ.காவை விட்டு வெளியேறிய செய்தியை நேற்று பதுளை நூலகசேவை மண்டபத்தில் நடைபெற்ற இ.தொ.காவின் மகளிர் மாநாட்டு இறுதி நிகழ்வில் வைத்து ஆறுமுகன் தொண்டமான் அறிவித்தார்.

## அதிருப்தியாளரை ஜனாதிபதி சந்திப்பார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து முரண்பட்டு அரசு பக்கம் சாய்ந்து தற்போது அமைச்சர் பதவிவகிக்கும் மூவரையும் பிரதியமைச்சர் ஒருவரையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை சந்தித்து முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார்.

அமைச்சர்களான நஜீப் ஏ.மஜீத், அமீர் அலி, ரிஷாத் பதியுதீன் ஆகியோரையும் பிரதியமைச்சர் ஹுசைன் பைலாவையும் நாளை முற்பகல் முக்கிய சந்திப்புக்கு வருமாறு ஜனாதிபதி மாளிகையிலிருந்து நேற்று அவர்களுக்கு அவசர அழைப்புக் கிடைத்ததாகத் தெரிகிறது.

## ‘விடுதலைப் புலிகள்’ இதழ் இன்று வெளிவருகின்றது

கிளிநொச்சி,ஜூலை4

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ‘விடுதலைப் புலிகள்’ பத்திரிகையின் ஆனி மாதத்திற்குரிய 124ஆவது குரல் ‘வெலிகந்தவில் புலிகள் மீதான தாக்குதல், சிங்களப் படைகளின் துரோகச் செயல்’ என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது. ‘உடன்பாட்டைச் செயற்படுத்த சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்’ எனச் சொல்லும் ஆசிரியர் தலையங்கத்துடன் வரும் இவ்வேடு, க.வே.பாலகுமாரன் எழுதிய “காலப் பாழில் நழுவிய கணங்கள்” என்ற அரசியல் கட்டுரையும், ‘புலிகளின் அரசியல் சமரும் சமாதானகால இழப்புகளும்’, ‘ஆறு மாதத்தின் பின் யாருக்காக வந்தது கட்டமைப்பு?’, ‘உரிமையின் பொருட்டற்ற சுனாமிக் கட்டமைப்பும் இறைமை பற்றிய கூக்குரலும்’ போன்ற அரசியல் கட்டுரைகளுடன், தமிழர் தாயகத்தைத் துண்டாக்கும் சிங்களக் குடியேற்றங்கள் என்ற தமிழர் தாயகத்தின் தொடர்ச்சியை துண்டாட விளையும் குடியேற்றங்கள் பற்றிய தொடர் கட்டுரையின் ‘திருமலை நகரக் குடியேற்றங்கள்’ பகுதியும், கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய ‘புத்தர் சிலையும் தமிழீழ மண் பறிப்பும்’ என்ற கட்டுரையையும் தாங்கி இவ்வேடு வருகின்றது.

மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புகளையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது. (ஒ)

## திறப்பு விழா

வட்டக்கச்சி,ஜூலை4

வட்டக்கச்சி கட்சன் வீதியில் அமைக்கப்பட்டுள்ள மகேந்திரவரதன் அறிவாலயம், அஞ்சனா முன்பள்ளி ஆகியவற்றின் கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கட்டடங்கள் வட்டக்கச்சி கட்சன் வீதியைச் சேர்ந்த அமரர் பரஞ்சோதி மகேந்திரவரதன் ஞாபகார்த்தமாக அவரது சகோதரனான கலியுகவரதனால் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-405-204)

## தமிழ்த்திறன் போட்டி

வட்டக்கச்சி,ஜூலை4

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களிடையே நடத்தப்படும் தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகள் இன்று திங்கட்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மொழித்திறன் போட்டிகளும் -

நாளைமறுதினம் புதன்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இசை, நடன வில்லிசைப் போட்டிகளும் -

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நாடகம், நாட்டுக்கூத்துப் போட்டிகளும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-405-204)



வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மாகாண மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணியளவில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மோதவுள்ள யாழ்.மாவட்ட அணியையும் (இடது) மன்னார் மாவட்ட அணியையும் படங்களில் காணலாம். இப்போட்டியில் மூன்றாம் இடத்திற்கான ஆட்டம் காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. இதில் திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணி மோதவுள்ளது. *(படங்கள் : தமிழினியன்)*

## உள்ளே வர்ண விளம்பரப் பக்கம்

வழமையாக ஞாயிற்றுக்கிழமை உதயனுடன் வெளிவரும் வர்ண விளம்பரப் பக்கங்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்றைய உதயனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

# சேது சமுத்திரத்திட்ட ஆரம்பவிழாவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற 588 பேர் கைது!

சென்னை,ஜூலை4

தமிழக மதுரையில் நடைபெற்ற சேது சமுத்திரத் திட்ட ஆரம்பவிழாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்த 588 பேரை மாவட்டப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் 'சேது சமுத்திர கப்பல் கால்வாய் எதிர்ப்பு இயக்கம்' என்ற பெயரில் வடக்கு மேயமாசி வீதி சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றவர்களையே பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பஞ்சமி நிலங்கள் மீட்பு அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏராளமான நன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த பெண்கள் கலந்துகொண்டனர் என்றும்-

ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைதுசெய்யப்படுவர் எனப் பொலீஸார் அறிவிக்கவே பெரும்பாலான பெண்கள் கலந்துகொள்ளாமல் நழுவிச்சென்றனர். எனவே, 506 பெண்கள் உட்பட 588 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் 3 திருமண மண்டபங்களில் தடுத்துவைக்கப்பட்டனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தியா ஜனநாயக நாடு, இங்குள்ள மீனவர்களின் உரிமைகள் பாதுகாக்கக்கூடியது. இத்திட்டம் பயங்கர அழிவுகளை ஏற்படுத்தக்கூடியது.

இத்திட்டத்தால் 5ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கூறுகின்றனர். ஆனால், லட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படும். எனவே, நாம் தொடர்ந்து போராட்டம் நடத்துவோம் என தேசிய கூட்டமைப்பு அமைப்பாளர் கூறினார்.

இதேவேளை, சேது சமுத்திர ஆரம்ப விழாவைக் கண்டித்து டெல்டா மாவட்ட கடலோரக் கிராமங்களில் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டன என்றும்-

விசைப்படகு மீனவர்கள் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக் கொடிகளை ஏற்றிக்கொண்டு மீனவர்கள் கடலுக்குள் சென்றனர் என்றும்-

இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசு உறுதியுடன் இருப்பதனால் மீனவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர் என்றும்-

தமிழ்நாடு - பாண்டிச்சேரி மீனவர் கூட்டமைப்பின் தஞ்சாவூர் மாவட்டத் தலைவர் தாஜுதீன் தெரிவித்துள்ளார்.

கச்சதீவை அரசு விட்டுக்கொடுத்ததனால் அங்கிருந்த 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் பலியானார்கள். அதே பாதிப்பு தமிழக கடலோர மாவட்டங்களுக்கும் ஏற்படும் - என அவர் மேலும் எச்சரித்தார்.

## பாஸ்வான் மருத்துவமனையில்

பாட்னா,ஜூலை4

இந்திய உரத்துறை அமைச்சரும், லோக் ஜனசக்தி தலைவருமான ராம் விலாஸ் பாஸ்வான் நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

லேசான மாரடைப்பு ஏற்பட்டதாலேயே அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் பாட்னாவிலுள்ள தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் முதலில் சேர்க்கப்பட்டார் என்றும்-

தவிர சிகிச்சையின் பின்னர் உடல் நிலை சீராக உள்ளதனால் தற்போது தலைநகர் டில்லிக்கு அழைத்துச்செல்லப்பட்டார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இன்னும் 100 ஆண்டுகளில் கடல் நீர் அமிலமாக மாறும்!

## இங்கிலாந்து நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை4

கடல் நீரை மாசுபடுத்தும் வகையில் மனிதரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இதனால், இன்னும் சுமார் 100 வருடங்களில் கடல்நீர் அமிலத்தன்மையாக மாறிவிடும் அபாயநிலைமை ஏற்பட வாய்ப்புள்ளது.

இவ்வாறு இங்கிலாந்து ஆராய்ச்சி நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கார்னீஜ் சுற்றுச் சூழல் ஆராய்ச்சி மைய நிபுணர் கென்கால்டீராவும் இங்கிலாந்து நிபுணர்களும் கடல்வளம் பற்றிய ஆய்வொன்றை நடத்தினர். அதன்பின்னர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு எச்சரித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சுற்றுச் சூழலின் வளத்தைப் பாதுகாப்பதில் கடலும் கடற்தாவரங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆனால், கடல்நீரை மாசுபடுத்தும் வகையில் மனிதனின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

உலகம் முழுவதிலும் உருவாகும் மொத்தக் கழிவுகளில் மூன்றில் ஒரு பகுதி கடலில் கலக்கிறது.

இவர்களின் நடவடிக்கைகளால் கரியமில வாயு அதிகமாக உற்பத்தியாகின்றது. இதனால், கடல்நீர் கொஞ்சம் கொஞ்சமாக அமிலத்தன்மையாக மாறிவிடுகிறது.

இவ்வாறு காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்தாவிட்டால் 2100 ஆம் ஆண்டுக்குள் கடல்நீர் மிகவும் மோசமான அளவுக்கு அமிலமாக மாறிவிடும். இதனால், கடல்வாழ் உயிரினங்களும், கடற்தாவரங்களும் அழிந்துவிடும். அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடல்நீர் அமிலமாவதால் வெப்ப அதிகரிப்பையும் கட்டுப்படுத்தமுடியாமல் போய்விடும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

# குஜராத் மாநிலத்தில் அடைமழை; எட்டாயிரம் கிராமங்கள் பாதிப்பு!

அஹமதாபாத்,ஜூலை4

குஜராத் மாநிலத்தில் பெய்துவரும் தொடர் மழையினால் 8 ஆயிரம் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. முப்படை வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

7 நாட்களாகப் பெய்துவரும் அடைமழை சுமார் 100 மணி நேரத்துக்கும் மேலாக தொடர்ச்சியாகப் பெய்கிறது. எனவே, தெற்கு குஜராத்தின் 8 மாவட்டங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

ஏறத்தாழ 8 ஆயிரம் கிராமங்கள் வெள்ளம் சூழ்ந்து இதர பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டன. மழை - வெள்ளத்தில் சிக்கி இதுவரை 123 பேர் பலியாகியுள்ளனர். வீடு இழந்த 2 லட்சம்பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஆனந்த், கேதா மாவட்டங்களின் பல இடங்களிலும் வதோதரா நகரிலும் 12 அடி உயரத்துக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. மஹிசாகர், ஹேரதி, வத்ரக், விஸ்வா மித்ரி ஆகிய ஆறுகள் அபாயக் கட்டத்தில் உள்ளன.

மாநிலத்திலுள்ள 54 அணைகள் நிரம்பி வழிகின்றன. 8 அணைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளன. முப்படையினரும், சிறப்பு அதிரடிப் படையினரும் 24 மணிநேரமும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளப் பகுதிகளுக்கு 40 இராணுவ படகுகள் விமான மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. குஜராத் மாநிலத்தில் அஹமதாபாத் விமான நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. அங்கு விமானப் படையைச் சேர்நத 12 ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மழை - வெள்ளம் காரணமாக குஜராத் மாநிலத்தில் சுமார் 1 கோடிபேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளம் சூழ்ந்த மாவட்டங்களில் ரயில், சாலைப் போக்குவரத்துகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அஹமதாபாத் - மும்பை இடையே ரயில் பாதையில் வெள்ளம் சூழ்ந்ததால் ஆங்காங்கே நடுவழியில் ரயில்கள் நிறுத்தி வைக்கப்பட்டன.



வெள்ளத்தில் சிக்கிய முதியவர் ஒருவரை மீட்புப் படையினர் ஹெலியில் இருந்தவாறு மீட்கும் காட்சி

சாந்தி எக்ஸ்பிரஸ் உட்பட 3 ரயில்களில் சிக்கித் தவித்த ஏறத்தாழ 3500 ரயில் பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரை அனுப்பிவைக்குமாறு மத்திய அரசுக்கு மாநில அரசு சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும், இரு நாட்கள் மழை நீடிக்கும் என்று வானிலை மையம் அறிவித்திருப்பதால் வெள்ள நிலைமை மேலும் மோசமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு ஹெலிகொப்டர் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டுவருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சதாமின் நாவல்

# ஜோர்தான் அரசின் தடையை மீறி பரபரப்பாக விற்பனையாகிச் சாதனை

அம்மான்,ஜூலை4

ஜோர்தான் அரசின் தடையையும் மீறி ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் எழுதிய நாவல் பரபரப்பாக விற்பனையாகிச் சாதனை படைத்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆங்கில நாவல் உலகில் அதிகளவு விற்பனையாகி சாதனை படைத்த ஹாரியா பாட்டர் நூலையும் விட சதாமின் நூலான "இங்கிருந்து வெளியேறு உன்னை நாசமாக்கி விடுவோம்" என்ற நாவல் வெகுவிரைவில் விற்றுத்தீர்க்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

186 பக்கங்களைக் கொண்ட அந்த நாவல் சதாம் ஹுசைன் சிறைவைக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து எழுதியதாகும்.

ஆரம்பத்தில் அந்த நாவலை வெளியிட ஜோர்தான் அரசு அனுமதியளித்திருந்தது. 10 ஆயிரம் புத்தகங்கள் அச்சிட்டு வெளியிடவிருந்த நிலையில் அமெரிக்க அரசுடனான நல்லுறவு பாதிக்கப்படும் என்ற அச்சுறுத்தல் காரணமாக ஜோர்தான் அரசு அந்த நாவலை வெளியிட தடைவிதித்தது. ஏனைய அரபு நாடுகள் சிலவும் சதாமின் நாவலை வெளியிட எதிர்ப்புத் தெரிவித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (11)

உலக அரங்கில்

# பட்டாசுத் தொழிற்சாலையில் விபத்து சிவகாசியில் 10 பேர் பலி; 22 பேர் காயம்!

சிவகாசி,ஜூலை4

தமிழக சிவகாசி அருகே பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பெண்கள் உட்பட 10 பேர் பலியானார்கள். மேலும் 22 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் விருதுநகரிலுள்ள வடிவேல் பட்டாசு ஆலை தொழிற்சாலையிலேயே இந்தப பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்தத் தொழிற்சாலையில் சிவகாசி, சுந்தரராஜபுரம், அனுப்பன்குளம், பேராப்பட்டி ஆகிய ஊர்களிலிருந்து சுமார் 300 பேர் வந்து வேலை பார்க்கிறார்கள் என்றும் -

நேற்றுமுன்தினம் நண்பகல் பட்டாசு தயாரித்துக்கொண்டிருந்த ஒரு குடோனில் பயங்கரச் சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால், அந்த ஷெட் இடிந்து சுக்குநூறாகியது. கரும்புகையைக் கக்கியபடி நெருபபு விண்ணை நோக்கி கொளுந்துவிட்டு எரிந்தது என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் கருகிய நிலையில் காணப்பட்டது. பலர் கைகளை இழந்து பலத்த காயமடைந்திருந்தனர் என அவதானிகள் தெரிவித்தனர்.

# சீன அரசின் நில அபகரிப்புக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்!

சீன அரசு மக்களிடமிருந்து நிலங்களை அபகரித்துக் கொள்ளப்படுவதற்கு எதிராக குவாண்டொங் மாகாணத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சான்லிங்கால் கிராமத்தில் 1656 ஏக்கர் நிலத்தை துப்புரவு செய்துகொண்டிருந்த புல்டோசர்களை விவசாயிகள் தடுத்துநிறுத்த முற்பட்டபோது நான்கு கிராமங்களை பொலீஸார் சுற்றிவளைத்தனர். இதனைத் தொடர்நதே விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து சில ஆர்ப்பாட்டக்காரர்களை பொலீஸார் தடுத்து வைத்தனர்.

நேற்றுமுன்தினம் சான்லிங்கால் கிராமத்திலுள்ள பொதுப் பாதுகாப்பு நிலையத்தை சுற்றிவளைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுவிக்கக்கோரினர்.

காலையில் 200 பேருடன் ஆரம்பித்த அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மாலையாகும்போது ஏனைய கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து கொண்டனர். அவர்கள் பதாகைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கிய வண்ணம் 'எமது நிலத்தை திருப்பித்தா' என கோஷமெழுப்பினர் என்றும்-

அவர்களைச் சுற்றி சுமார் 600 பொலீஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது என்றும் - அவதானிகள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவரை பொலீஸார் குண்டாந்தடியால் தாக்கினர். கீழே தடுமாறி விழுந்தவரை உதைத்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தை படமெடுத்துக்கொண்டிருந்த அமெரிக்கப் படப்பிடிப்பாளர் ஒருவரை தடுத்து வைத்த சீனப் பொலீஸார் பின்னர் அவரை விடுதலை செய்தனர் எனச் செய்தியாளர்கள் தெரிவித்தனர். சீன அரசின் இந்த நடவடிக்கையினால் சுமார் 7 ஆயிரம் விவசாயிகள் தமது காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்பதும் -

இவர்களை வெளியேற்றுவதற்கான ஒப்பந்த வெற்றுத்தாள்களில் உள்ளூர் தலைவர்களுக்கு லஞ்சம் வழங்கி நிர்வாக அலுவலகம் கையெழுத்துப் பெற்றுக்கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road.
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

Study In India
B.OPT (கண் மருத்துவம்)
காலம்: 4 வருடங்கள்
தகுதி: க.பொ.த (உ/த) சித்தி
உயிரியல், பௌதிகம், இரசாயனம்
கல்லூரி: V.M. மருத்துவ சார்புக் கல்லூரி
பாண்டிச்சேரி.
NN CONSULT
Telephone: 5558833 Fax: 5558844
NO: 60, (first Floor), peterson lane
(C-43842)(16-13) Colombo -06
e.mail: nnconsult @ sltnet.lk

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கச்சான் 1கிலோ 50/= விவரங்களுக்குத் தொடர்பு: 2263387. (37262)

எம்மிடம் 13ஸ்ரீ XXXX தொடர் இலக்க முடைய லான்சர் கார் (குளிரூட்டப்பட்டது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 24/2, கேணியடி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். T.P.:0712512604. (37262)

எம்மிடம் T.V. வூவர் (boofer), கார் பற்றி, ஒகன் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:0714182428. (37276)

## காணி விற்பனைக்கு

உடுவில் மாடசாலைக்கு முன்பாக ஞானப் பிரகாசம் வீதியில் முதலாவது காணி 5¼ பரப்பு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விவரங் களுக்கு: சே.கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். T.P.: 7802. (37247)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 011 4613157 (நியாயமான விலை கோரும் முதல் நபருக்கே கொடுக் கப்படும். (37196)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 5ஸ்ரீ, 3ஸ்ரீ தொடர் இலக்கத்தைக் கொண்ட மொறிஸ் மைனர் காரும் 1ஸ்ரீA 35 தொடர் இலக்க காரும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.நடராசா, 40/9, வைமன் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2225849. (37284)

## வாடகைக்கு

நல்லூர், கந்தர்மடம், ஆனைப்பந்தி பகுதி யில் அமைதியான சூழலில் சகல வசதிகளு டன் அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு: T.P.: 0777 238378. (37261)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் 5 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 570132, 0777 357675 (நண்பகல் 12.00 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்). (37119)

## கடை வாடகைக்கு

யாழ்.நகரை மிக அண்மித்த கஸ் தூரியார் வீதியில் அமைந்த கடை ஒன்றுவாடகைக்குண்டு. நகைக்கடை, வேறு பாவனைக்கும் உகந்தது.

தொடர்பு:
49, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(37154) (21-45-34)

## SKY COMPUTERS (PVT) LTD.

Affiliated with Irish International University (U.K.)
No.109, Kandy Road, Chundikuli, Jaffna
Tel:021 4590325 Fax: 021 4590325

- MS OFFICE -3MONTHS
- MS WORD -1 MONTH
- MS EXCEL -1 MONTH
- MS ACCESS -1 MONTH
- MS POWER POINT 1 MONTH

FULL Payment 2000/=

ஆரம்பம் பிரிவு1: 06-07-2005 பிரிவு2: 09-07-2005

- DESK TOP PUBLISHING -3MONTHS
- ADOBE PHOTOSHOP -1 MONTH
- ADOBE PAGEMAKER -1 MONTH
- COREL DRAW -1 MONTH

அனைத்துப் பாடநெறிகளுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும்.

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு 20% கழிவு உண்டு. 15.07.2005 வரை.

உடன் விரையுங்கள் E-mail: skycom@wow.lk (கச்சேரிக்கு அருகில்) Today you learn tomorrow you lead

## தொண்டை அடைப்பான் தடுப்பூசி மருந்து வந்தது

வலி.தெற்கு, ஜூலை4

வலிகாமம் வடக்கு தெல்லிப் பழை கால்நடை வைத்தியர் பிரிவில் மாடுகளுக்கான தொண்டை அடைப் பான் நோய்க்குரிய தடுப்பூசி மருந்து கிடைக்கப் பெற்றுள் ளதாக கால்நடை வைத்தியர் எஸ். மகாதேவன் அறி வித்துள்ளார்.

இன்று திங்கட் கிழமையில் இருந்து இப்பகுதிக் கிராம சேவையாளர் பிரிவு களில் மாடுகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் நட வடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என் றும் அவர் கூறினார். (எ- 152)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35நாளில் 2kg மேல் வளர்ச்சியடையக் கூடிய நம்பர்-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 06-07-05 மாலை விநியோகிக்கப்படும். பதிவு களை மேற்கொள்ளவும் ராஜீவ் ஆனைக்கோட் டைச் சந்தி. தாரகை முதலாம் கட்டை, பருத் தித்துறை. றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட். P.ரவி, சாவகச்சேரி. ராதா, மாவடி, வட்டுக் கோட்டை. மாருதி பாம், வடக்கம்பரை, தொல் புரம். T.P.: 2223529, 2222867. (37182)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**
2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com

Minimum Requirement: G.C.E. A/L 3 Passes
ஆரம்பம்: 09-07-2005

**CIMA**
Foundation Level & Intermediate Level
Medium English
Minimum Requirement: G.C.E. O/L (3C) Passes
ஆரம்பம்: 17-07-2005

**aat (SriLanka)**
Foundation Level, Intermediate Level & Final
Medium: Tamil & English Exam: Jan. 2006
Minimum Requirement: G.C.E. O/L 5 Passes or G.C.E A/L 2 Passes
ஆரம்பம்: 17-07-2005 Medium: English & Tamil
Further Details: Director,
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.
464, Hospital Road
(Near Commercial Bank), Jaffna.

## ஊர்காவற்றுறைப் பங்குக்கு புதிய பங்குத்தந்தை

குருநகர், ஜூலை4

ஊர்காவற்றுறைப் பங்கின் புதிய பங் குத் தந்தையாக வண.பிதா எக்ஸ் டபிள்யு. ஜேம்ஸ் அடிகளார் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப் பட்டுள்ளார். இவர் முழங்காவில் பங் கிலிருந்து ஊர்கா வற்றுறைக்கு இட மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஊர்காவற்றுறைப் பங்கில் இறைபணி யாற்றிய அருட் திரு அன்ரனி ஞானப் பிரகாசம் அடிகளார் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இரணைப்பாலைப் பங்கிற்கு இடம் மாற்றம் செய்யப் பட்டுள்ளார். (எ-51)

## கணபதி ஜோதிட நிலையம்





பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37054)(42.19.45)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ.இல. 149/04
தன்மை: விவாகரத்து

கிருஷ்ணதேவன் அகிலா, ஐயனார் வீதி, கச்சேரியடி, கிளிநொச்சி. வழக்காளி.

சகாதேவன்கிருஷ்ணதேவன், சென்.செபஸ்தியார் கோயிலடி, கோண்டாவில் வடக்கு, யாழ்ப்பாணம். எதிராளி.

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி எதிராளிக்கு,

மேற்படி இலக்க வழக்கானது வழக்காளியால் கிளி நொச்சி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு குறித்த எதிராளிக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டும் மன்றின் தவணைக்குச் சமுகமளிக்காது தலைமறைவாகத் திரிவதால் எதிராளிக்கான அழைப்பாணை இப்பகிரங்க அறிவித்தலூடாக விடப்படுகின்றது. எதிராளியோ அல் லது உரித்துடையோரோ இப்பகிரங்க அறிவித்தல் பிர சுரிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாள்களுக்குள் உரிய மன் றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளவும். தவறும் பட்சத்தில் இவ்வழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்பட்டு ஒருமுக விளக்கம் நடத்தப்படும். எனவே, வழக்காளியின் உரிமைக் கோரிக்கை ஏற்று தீர்ப்பு அளிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

மன்றின் கட்டளைப்படி

வரைவு:
சி.யோகராணி,
சட்டவாளர்,
கிளிநொச்சி.

செ.மாணிக்கராசர்,
பதிவாளர்.

(சி36905)(26-14-45)

## SKY LINE RESTAURANT



Ⓡ இஸ்கை லயின் போசனசாலை

யாழ்.கன்னாதிட்டிச் சந்திக்கும் வின்சர் தியேட்டருக்கும் இடையில் இல.198, கஸ்தூரியார் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இஸ்கை லயின் போசனசாலையில் தரமான உணவுவகைகள் சுத்தமாகவும் சுகாதாரமுறைப்படியும் உடன் தயாரித்து வழங்கப்படுகிறது.

- SANDWICHES
- SPECIAL RICE
- NOODELS
- SANDAY SPECEAL BURIYANE
- FRUIT JUICE & ICE CREAM
- CHICKEN DISHES
- MUTTON DISHES
- FISH DISHES
- PROWNS DISHES
- CUTTLE FISH DISHES

இந்த உணவு வகைகளை முன்கூட்டியே ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம். எண்ணிக்கை அதிகமாக இருந்தால் இலவசமாகப் போக்குவரத்து விநியோகம் வழங்கப்படும். (குறிப்பிட்ட தூரத்திற்குள்)

உரிமையாளர்: S.T.R.
T.P.021 222 7539

(37251)(46-14-45-26)

## கேள்வி அறிவித்தல்

உணவு விவசாய ஸ்தாபன (OSRO/SRL/401/JPN) விதை உற்பத்தித் திட்டத்தின் கீழ் பரந்தன் விவசாயத் திணைக்கள விதைக் களஞ்சிய கட்டட (SEED STORE BUILDING) நிர்மாணத்திற்கான

### கேள்வி அறிவித்தல்

பரந்தன் விவசாயத் திணைக்கள விதைக்களஞ்சியக் கட்டட நிர் மாண வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் எம் 5 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து உணவு விவசாய ஸ்தாபனத்தின் தேசியத்திட்ட இணைப்பாளரினால் ஏற்றுக்கொள் ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் வவுனியா 99/4. ஸ்ரேசன் வீதியில் அமைந் துள்ள உணவு விவசாய ஸ்தாபனத்தின் தேசியத்திட்ட இணைப்பாளர் காரியாலயத்தில் இருந்து 14-07-2005 வரை வழமையான வேலை நாள்களில் (திங்கள் முதல் வெள்ளிவரை) காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகைப் பணமாக ரூபா 1000/=ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலை யின் பெயரை OSRO/SRL/401/JPN-1 என்று கடித உறையின் இடது மூலையில் குறிப்பிட்டு உணவு விவசாய ஸ்தாபனத்தின் இலங் கைப் பிரதிநிதி. இல.202. பௌத்தலோக மாவத்தை. கொழும்பு - 7 (FAO Representative, No -202, Bauddhaloka Mawatha, colombo-07) என்ற விலாசத்திற்கு 01-08-2005 அன்று மாலை 4 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

கலாநிதி ஏ.எஸ்.விவேகானந்தன்,
OSRO/SRL/401/JPN இன் தேசியத் திட்ட இணைப்பாளர்,
இல.99/4, ஸ்ரேசன் வீதி, வவுனியா.

(37193)(46-26-14-45)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 22 - 08 - 1947



மறைவு 15 - 06 - 2004

### அமரர் கந்தையா ஜெகசோதி

ஓராண்டு மறைந்தாலும் ஆறவில்லை எம்மனம்
தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்
மாறாத துன்பந்தான் மனதை வாட்டுகின்றதே
எந்நாளும் உங்களை நினைந்தே
நாமிங்கு வாழுகின்றோம்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு.

- குடும்பத்தினர்.

(37220)(26-14-45)

## மரண அறிவித்தல்

### திருமதி சடாட்சரம் நாகம்மா



ஐயனார் கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சடாட்சரம் நாகம்மா அவர்கள் 01.07.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.சடாட்சரம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வெற்றி வேலு செல்லாட்சிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மறவன்புலோ பரம்பரை வைத்தியர் சின்னத்தம்பி மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் வெ.துரை ராஜாவின் (இளைப்பாறிய செயலாளர், துறைமுக அபிவிருத்தி சபை) அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சி.இராசையா (பரம்பரை வைத்தியர்), சி.சுந்தரம் மற்றும் திருமதி து.கமலநாயகி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் சிறீதேவி, ரஞ்சித்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுமணாவதி (லண்டன்), ஸ்ரீகௌரி, ரவீந்திரன், ரவிச்சந்திரன், ரவிச்செல்வன், ஸ்ரீவசந்தி, ரவிசங்கர் ஆகியோரின் அன்பு மாமியும் துவாரகன், சுயானி ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2005) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சுன்னாகம் கொத்தி யாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீநிகேதன்.
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(37291)(26-14-45)

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


## பொறுப்பற்ற - பொருத்தமற்ற - பேச்சு

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கையெழுத்திடுவது தொடர்பான விவகாரம் அரசியலில் 'சூடு' கிளப்பிய சமயம் அதிகம் சத்தம், சந்தடி காட்டாமல் ஒதுங்கியிருந்த - அல்லது ஒதுக்கி ஓரம் கட்டப்பட்டிருந்த - வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீண்டும் வாய்திறந்திருக்கிறார். வழமை போல சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் அதில் இரண்டு முக்கிய விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஒன்று - சமாதான காலத்தில் - அதற்கான சூழ்நிலையைப் பயன்படுத்தி - அரசியல் படுகொலைகளைப் புலிகள் புரிகிறார்கள் எனவும், யுத்தநிறுத்த உடன்பாடு அரசைக் கட்டுப்படுத்துவதால் இத்தகைய குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாகவும், இந்தப் பின்னணியில் யுத்தநிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்து, அரச தரப்பு இத்தகைய கொலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடியதாக அதில் மாற்றம்கொண்டுவரப்பட வேண்டும் எனவும் கதிர்காமர் கூறியிருக்கிறார்.

மற்றது - விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் ஜனநாயகச் சூழ்நிலையை மீளக் கொண்டுவர முடியாவிட்டால் நோர்வே தனது பணியிலிருந்து விலகிவிடவேண்டும் என்ற சாரப்படவும் அவர் உரைத்திருக்கிறார்.

பூனை தன் கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடும் என நினைக்குமாம். அத்தகைய நினைப்பில்தான் நமது இலங்கைத் தீவின் வெளிவிவகார அமைச்சரும் பேசுகின்றார் போலும்.

இந்தக் கொலைச் சம்பவங்கள் - அவை புலிகளுக்குச் சார்பானவையோ, எதிரானவையோ - முற்றும் முழுக்க அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் நடக்கின்றன. புலிகளின் பிரதேசத்தில் அல்ல.

சாதாரணமாக ஒரு மனிதர் சயனைட் வைத்திருப்பது இலங்கையின் எந்தச் சட்டத்திலும் குற்றமல்ல. இராணுவத்தினர் அணிவது போன்ற 'பெல்ட்' (பட்டிகள்) அணிவது சட்ட விரோதமானதல்ல. பெரும் தொகையில் பணத்தை எடுத்து வருவது கூடத் தவறானதல்ல.

ஆனால், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் 'சயனைட்' கொண்டுவந்ததற்காகவும், 'பெல்ட்' கட்டிவந்ததற்காகவும், ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற கிழக்கு மக்களின் புனர்வாழ்வுக்கான பணத்தை எடுத்துச்சென்றதற்காகவும் போராளிகளை - தமிழ்ப் பொதுமக்களை - கைதுசெய்யவும், தடுத்துவைக்கவும் சட்டவசதிகளைக் கொண்ட அரசுத் தரப்பு, தனது பிரதேசத்தில் நடக்கும் கொலைகளைத் தடுப்பதற்கும், அது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்யவேண்டும் என்று கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கை. ஏற்றுக்கொள்ளமுடியாத அபத்தம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட தனி மனிதப் பிறழ்வான கருணாவையும், அவரின் பெயரில் ஒரு சில இன விரோதிகளையும் மடக்கி வைத்துக்கொண்டு அரசுத் தரப்பு புரியும் திருகுதாளம்தான் இவ்வளவு குழப்பத்துக்கும், கொலைகளுக்கும் காரணம் - பின்னணி - என்பதெல்லாம் இந்நாட்டில் அரசியல் அரிச்சுவடியே படிக்காத சாதாரண பாமரனுக்கும் தெரிந்த உண்மை.

அரசு, தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இத்தகைய சமூக விரோதக் கும்பல் ஒன்று செயற்படாமல் இருப்பதற்குத் தனது இரும்புக் கையைக் கொண்டு நடவடிக்கை எடுத்திருக்குமானால் -

அப்படி நடப்பதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை எந்த வகையிலும் தடையாக இல்லாததால் - மாறாக, அத்தகைய நடவடிக்கையை உடன்படிக்கை வலியுறுத்தி நிற்பதால் - அத்தகைய செயற்பாட்டை அரசுத் தரப்பு நேர்மையாகச் செய்திருக்குமானால் -

இத்தகைய குழப்பநிலை கிழக்கிலங்கையில் தொடராது.

இன்னும் காலம் கடந்துவிடவில்லை. அமைச்சர் கதிர்காமர் வழமைபோல தமது விதண்டாவாதக் கருத்துகளை முன்வைக்கும் இந்தப் போக்கைக் கைவிட்டுவிட்டு, அரச ஆதரவில் - ஏற்பாட்டில் - இயங்கும் புலி விரோதக் கொலைக்காரக் குழுக்களைத் தமிழர் தாயகத்திலிருந்து வேரோடு களைய நடவடிக்கை எடுக்கும்படி அரசை வற்புறுத்தவேண்டும். அப்படி அவர் செய்யவைப்பாரானால் கிழக்குப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் சூழ்நிலை ஏற்படும்.

கிழக்கில், புலிகள் சுட்டுக்கொல்லப்படுவது முதல் அவர்களின் அரசியல் அலுவலகங்கள் தாக்கப்படுவது வரை - புலி விரோத நடவடிக்கைகள் அங்கு அரங்கேறிக்கொண்டிருக்கும் வரை - அச்செயல்களின் பின்னணியில் அரச புலனாய்வுப் பிரிவுகள் போன்றவை சூத்திரதாரிகளாகத் தொடர்புபட்டிருக்கும்வரை - கிழக்கில் வன்முறைகள் ஓயப்போவதில்லை என்ற யதார்த்தத்தை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர் உணரவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வே குறித்து கதிர்காமர் கூறுவதும் நகைப்புக்கிடமானது. 'சாத்தான்வேதம் ஓதுவது போல' உள்ளது.

இங்கு சுமார் ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பணியை ஆரம்பித்த பின்பு, நோர்வே தனது சேவையை எப்போது இடைநிறுத்தியது?

சமாதான முயற்சிகளை ஆரம்பித்து, அதனைத் தொடர்ந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசிடமிருந்து, லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர் கொடுத்த கயிற்றை விழுங்கிவிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்தார். அந்த ஜனநாயக விரோத செயற்பாடு அரங்கேறியபோதுதான் தனது அனுசரணைப் பணியை மூடை கட்டி வைத்துவிட்டு - இடைநிறுத்திவிட்டு - நோர்வே தற்காலிகமாகப் பின்வாங்கியது.

ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சி நடக்கும் தென்னிலங்கை அரசியலிலேயே ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் படலம் தினசரி அரங்கேறுகிறது. விடுதலைப் போராட்டம் நடக்கும் மண்ணில், விடுதலை கிட்ட முன்னர், ஜனநாயகத்தின் பெயரால் சமூக விரோதிகள் ஊடுருவ வாய்ப்புக்கிடைக்கவே கிடைக்காது. அதைத் தாங்கமுடியாத இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், அதற்காக நோர்வேத் தரப்பைத் திட்டுவது பொருத்தமே அற்றது.

# மண்கும்பானில் ரூ.70 லட்சம் செலவில் மணல் அணை, மதகு நிர்மாணிக்கப்படும்

வேலணை, ஜூலை4

நியாப் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மண்கும்பான் பகுதியில் மணல் அணை ஒன்றும் மதகு ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கு 70 லட்சம் ரூபா செலவிடப்படும்.

நன்னீர்த்தேக்கம் ஒன்றை நிறுவும் நோக்குடனும் கடல்நீர் தரையினுள் உட்புகாமல் தடுக்கும் நோக்குடனும் மேற்படி மணல் அணையும் மதகும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

வேலணை அராலிச் சந்தியில் இருந்து மண்கும்பான் வரை சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்துக்குத் தடுப்பு அணையும் சுமார் 22 அடி நீளமான மதகும் இந்தத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும்.

இதுவிடயமாக ஆராயும் கூட்டம் ஒன்று அண்மையில் மண்கும்பான் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெற்றது. தீவகம் தெற்கு வேலணை உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நியாப் திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன், மண்கும்பான், அல்லைப்பிட்டி, சாட்டி, பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்களான இ.யோகேஸ்வரன், ம.அம்பிகைபாகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேற்படி மணல் அணை, மதகு என்பன நிறுவப்படுமானால் மழை நீரைச் சேகரித்து வைக்கக்கூடியதாக இருக்கும் என்றும் -

மண்கும்பான், சாட்டி, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(எ-167)

## நவாலி தேவாலய குண்டுத்தாக்குதலில் பலியானோரின் 10 ஆவது ஆண்டு நினைவுதினம்

### திருவுருவப்படங்கள் வைத்து அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை4

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் பலியானவர்களின் 10 ஆவது ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் மாலை 4 மணிக்கு மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த அனைவரதும் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு, விசேட வழிபாடு நடத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்.

இதேவேளை- நினைவுதினத்தைச் சிறப்புற அனுஷ்டிக்கும் வகையில் குண்டுத்தாக்குதலில் பலியான அனைவரது திருவுருவப்படங்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னதாக சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் கையளிக்குமாறு ஆலய பங்குத்தந்தை வண. பி.நேசராஜா அடிகளார் கேட்டுள்ளார். (எ-185)

## புன்னாலைக்கட்டுவன் மருந்தகத்துக்கு செவ்வாயன்று அடிக்கல் நடப்பட்டது

வலிகாமம் தெற்கு, ஜூலை4

புன்னாலைக்கட்டுவனில் மத்திய மருந்தகம் ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மருந்தகக் கட்டடத்துக்கான அடிக்கல்லை அவ்வூர் வாசியான ஆசிரியர் செல்லப்பா நட்டுவைத்தார்.

புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம் நிரந்தரக் கட்டடம் எதுவுமற்ற நிலையில் வசதிகள் குறைந்த, தனியாளுக்குச் சொந்தமான பழைய கட்டடம் ஒன்றில் இயங்கிவருவது தெரிந்ததே.

மருந்தகத்துக்கான நிரந்தரக் கட்டடத் தேவையை உணர்ந்த புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த ஆசிரியர் செல்லப்பா தமது தாய், தந்தையரின் ஞாபகார்த்தமாக இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்குத் தேவையான காணியை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி என்.கனகரட் ணம், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் சி.குமாரவேலு, புன்னாலைக்கட்டுவன் கிராம சேவையாளர் மற்றும் அவ்வூர் பொதுமக்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மேறபடி கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதற்கான பொறுப்பினை சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

(எ-152)

## கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு விரைவில் தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜூலை 4

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நல்லூர், தென்மராட்சி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவில் உள்ள சங்கங்களின் பிரதிநிதிகளுக்கே இப்பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திலும் தலா 25 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படும் என்றும் -

பயிற்சிக் காலத்தில் மதிய உணவும், பயிற்சிக்கான கொடுப்பனவும் வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகள் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை4

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகளின் விவரங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரால் திரட்டப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்வதற்கு வசதியாக யாழ்.அரச அதிபரின் பணிப்பின் பேரில் இவ் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகள் அற்றவை தளபாடம் மற்றும் நூல்கள் பற்றாக்குறையாக உள்ளவை போன்ற பாடசாலைகளின் விவரங்களைச் சேகரித்து உடன் அனுப்பிவைக்குமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஸ் வலயப்பணிப்பாளரைச் கோரியுள்ளார். இதற்கமையவே விவரங்கள் திரட்டப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி-202-203)

## ஆழிப்பேரலை பாதித்த குடும்பங்களுக்கு நலன் விரும்பிகளும் வீடு அமைத்து வழங்குவர்

யாழ்ப்பாணம்,ஜூலை4

குடாநாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு தலா 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் வீடுகளை அமைத்துக் கொடுக்க நலன் விரும்பிகளும் உதவி வழங்கும் நிறுவனங்களும் முன்வந்துள்ளன.

ஆழிப் பேரலையால் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் தமது வீடுகளை முற்றாக இழந்துள்ளன.

இவர்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு ஒரு வீட்டிற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்திருந்தது.

இந்நிலையில், நலன் விரும்பிகளும் உதவி வழங்கும் நிறுவனங்களும் தலா 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

இந்நிறுவனங்கள் நேரடியாகவே இப்பணியை மேற்கொள்ளவுள்ளன.

500 சதுர அடிபரப்பில் சகல உட்கட்டுமான வசதிகளுடனும் இவ் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-202-203)

### உதயவாக்கு

விஷயங்களை அறிய மனிதன் காட்டும் ஆர்வம், அவற்றுடன் சொந்தக் கற்பனையைச் சேர்த்துப் பிறருக்குக் கூறுவதற்கு.

-ஓர் அறிஞர்.

### நாளை

ஆனி 21

செவ்வாய்க்கிழமை

05.07.2005

திதி: சதுர்த்தசி

பிற்பகல் 4.20 வரை

நட்சத்திரம்: மிருகசீரிடம்

பிற்பகல் 02.57 வரை

சுபநேரம்: 10.27 - 11.57

ராகுகாலம்: 02.57 - 04.27

(யாவும் பழைய நேரப்படி)

## தீவக எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் புளியங்கூடலில் கரும்புலிகள் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை4

தீவகம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு புளியங்கூடல் முத்துமாரியம்மாள் ஆயல முன்றிலில் நடைபெறவுள்ளன.

விசேடமாக அமைக்கப்பட்ட கரும்புலிகளின் நினைவுப் பந்தலில் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நினைவுப் பொதுக்கூட்டம், சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

இதேவளை-

தீவகத்தின் பல பகுதிகளிலும் கரும்புலிகள் நினைவு பந்தல்கள் அமைக்கப்பட்டு பதாதைகள் கட்டப்பட்டு கொடிகளால் அலங்காரம் செய்யப்பட்டு வருவதாகவும் -

கரும்புலிகள் தினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஊரக பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்றும் - கூறப்பட்டுள்ளது.

(எ-204)

## பதவி வெற்றிடம்

1. *கணனி இயக்குநர் - பயிலுநர்* (முழு நேரம்)
2. *தொலைபேசி இயக்குநர் - பயிலுநர்* (முழு நேரம்)

மேற்கூறிய பதவி வெற்றிடங்களிற்குத் தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரும் தங்கள் சுயவிவரக்கோவையை 07-07-2005 வியாழக் கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

T.P.: 222 6637
4591298

Visitalk.net
315A, Parameshwara Junction,
Palaly Road, Thirunelvely.

(37278) (24-16)


## IMMEDIATE VACANCIES

**NorthEast Youth Action Organization (NEYAO)**

NEYAO is inviting qualified candidates for an interview, with their Resume(CV), at the NEYAO, **ON THURSDAY, JULY 7, 2005 BETWEEN 9:OOam AND 12:00 Noon.**

1) **Project and Administrative Officer:** *(Position -01)*
Responsible for creating, implementing and monitoring international organizations funded projects. Administering the Office of the YAO in Kilinochchi. Travel to coastal project sites in the NorthEast is involved.
Starting Salary RS 12,000. per month. One year renewable contract with first three month probationary period.

*Qualification :* Degree from a university OR Five years experience in administration or teaching. Should be able to write projects in English, write monthly and end-of-year project report in English. Translate English into Tamil. Interview will be in English Only. Typing skills and a very good working knowledge of Word and Excel essential.

2) **Technical Officer:** (Posision-01)
Responsible for designing sports and youth service buildings and estimating costs.

*Qualification:* Two-Year Technical College Diploma OR Five years experience in Technical drawing and estimating costs of buildings. Should have at least beginning knowledge in use of AutoCAD. Salary: Rs.11,000. per month during the probationary period. Rs. 12,000. thereafter. One year renewable contract with first three month probationary period.

Please be present for an interview on Thursday July 7, 2005 with your Resume between 9:OOam & 12:00 Noon at Youth Action Organization (next to the Kilinochchi Sports Field), A9 Road, Kilinochchi.

**Project Director,
NEYAO, A-9 Road,
Kilinochchi.**

(C/43850) (24)

## CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA.

### ANNUAL PRIZE GIVING - 2005

**Saturday, 9th July 2005
at 10.30 a.m.**

Chief Guest:
Rt. Rev. Dr. Thomas Savundaranayagam
*Bishop of Jaffna.*

Chair person
Ven. S.P.Nesakumar
*Archdeacon - Jaffna*

***Parents, Old girls& Well wishers are cordially invited.***

**- Principal,
Staff & Students.**

(C/43841) (24)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 19 - 02 - 1929



விண்ணில் 04 - 07 - 1994

திருமதி **அனா ஞானமணி நரசிங்கம்**

"மரித்தோருக்காகப் பிரார்த்திப்பது பரிசுத்தமும் பிரயோசனமான யோசனை"

உங்கள் நினைவில் வாழும்:
கணவர், மக்கள், மருமக்கள், சகோதரி, பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாலுசந்தி,
கரவெட்டி. (37269) (24-16)

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் முல்லைத்தீவு

வழ.இல. 497/05
தன்மை: மண நீக்கம்

சின்னத்தம்பி கிறிஸ்ரிமதுரானந்தம்,
மாமூலை, முள்ளிவளை.
வழக்காளி

**அறிவித்தல்**

கிறிஸ்ரிமதுரானந்தம் லதாமேரி,
15, சென்.செபஸ்தியான் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
எதிராளி

மேற்படி இலக்க வழக்கானது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு 2005/08/02ஆம் திகதிக்கு தவணையிடப் பட்டுள்ளது. எதிராளி தற்சமயம் வெளிநாட்டில் இருப்பதால் இவ் வழக்கு தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் எதிராளியோ அல்லது அவர்மீது அக்கறையுடையோரோ 2005/08/02ஆம் திகதிக்கு முன் இந்நீதிமன்றில் தோன்றி ஆட்சேபனை இருப்பின் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் ஒருமுகவிளக்கம் நடத்தப்பட்டு இவ்வழக்கு முடிவு காணப்படும் எனவும் அறிவித்தல் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு.

வரைபு:
(திரு.த.பரஞ்சோதி)
சட்டவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று, முல்லைத்தீவு.

(சி/43849) (24-16)

## துயர் பகிர்கின்றோம்

எமது மக்கள் வங்கி
யாழ். கன்னாதிட்டிக் கிளையின்
பிரதி முகாமையாளர்
திருமதி செல்வலட்சுமி தனநாயகம்
அவர்களது அருமைத் தாயார்
திருமதி
**தெய்வநாயகி வைரவப்பிள்ளை**

அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவிக்கின்றோம்.

**முகாமையாளரும்
ஊழியர்களும்**

மக்கள் வங்கி,
யாழ்.கன்னாதிட்டிக்கிளை. (சி/43853) (24-16)


**Spoken English
With
Grammar**

· By: K.Nishanthan
புதிய பிரிவு ஆரம்பம்:
05-07-2005
செவ். 2 p.m. (ப.நே.)

**C.C.A.**
கன்னாகம்.

(37237) (24-16)



## வாணி சோதிடம்

*வாணி சோதிடம் 1963இல் இருந்து இன்று வரை எமது சேவை நடைபெறுகின்றது. கேட்டுப்பார்த்தால் உண்மை புரியும். கைரேகை, ஜாதகம், குறிப்பு, வைத்தியத்தில் புலப்படாத விளைய நோய்களையும் தெரிந்துகொள்ளவும். கூறும் பலன் பொய்யாயின் பணம் வாபஸ். அத்துடன், திருமண சேவையும் நடைபெறுகிறது.*

**சோதிடர் சி.கணேசன்
வாணி சோதிடம்
22/1, கச்சேரி ஒழுங்கை, நல்லூர்.**

(37267) (24-16)



## LML பிரீடம், ஸ்கூட்டர் பாவனையாளர்களே!

இந்தியாவிலும் கொழும்பிலும் உள்ள தொழில்நுட்பவியலாளர்கள் உங்கள் வாகனங்களை மீளாய்வு செய்வதற்காக யாழ்ப்பாணம் வருகைதர உள்ளார்கள். எனவே, நீங்கள் காலதாமதமின்றி தொடர்பு கொள்ளவும்.

**காலம்: 04-07-2005 (திங்கட்கிழமை)**
**நேரம்: காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை**

**S.P.N. மோட்டேர்ஸ்**
***171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.***

(37263)(24-16)



## விற்பனைக்கு

சிறுகுறிஞ்சா இலைப் பவுடர் விற்பனைக்குண்டு.
இது நீரிழிவு நோயாளர்களுக்கும் கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சிறந்த மூலிகையாகும். நீரிழிவு நோயாளர்களின் குருதி குளுக்கோஸ், கொலஸ்ரோல், ரைகிளிசைரைட் ஆகியவற்றைக் குறைத்து நோயைக் குணமாக்கும் சிறந்த உணவாகும்.

தொடர்பு: **BIO TEC ORIENT (PVT) LTD.** (37272)
இல. 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி
T.P.: 021 4590907 (விவசாயப் பண்ணைக்கு அருகில்).


## Vacancy Notice

### UNICEF

**Post Titel: Project Assistant to monitor Cash Assistance to Government NGO Partners**

**Duty Station:** Kilinochchi
**Major duties:** Under the supervision of the Head of Zone Office, assist in the area of finance and accounting control, specifically with regard to management of cash advances to Government

- Review and justify documentation submitted by Government and NGO's, reconcile outstanding advances and assure compliance with rules, regulations and established budgetary limits.
- Identify budget issues and discrepancies in documentation sent by partners
- In collaboration with programme sections, monitor monthly outstanding cash advances.
- Provide training to Government and NGO partners.

**Educational Qualifications:** Five years of experience of which two (2) years of practical work experience in finance and accounting.
**Languages:** Fluency in English and Tamil required

Those who possess the required qualifications and wish to apply for the above post should submit their applications to the Head of Zone Office, 3 Kumarasamy Road, Ganesapuram, Kilinochchi before 8th of June.

Interviews will be granted only to short-listed candidates. Canvassing in any form will be a disqualification.

UNICEF is a non smoking working environment. Applications from qualified women are encouraged.

(37239) (24)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
1980 - 05 - 29



அன்னை மண்ணிறிற்காய்
2003 - 06 - 27

**நாகரத்தினம் நிரஞ்சனி**
**கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் யாழினி**

சின்ன மழை முகமும் உந்தன்
கொஞ்சு தமிழ் பேச்சும்
எங்கள் நெஞ்சம் மறக்குதில்லையே
அன்புச் சகோதரியே.....
இசைக்கும் காற்றில் உன் பெயர் கேட்டோம்
அந்த உதைக்கும் ஆற்றில் உன் மொழி
எட்டுத் திசைக்கும் உன் வருகைக்காய்
மெட்டெடுத்து பாடுகிறோம் வாராய் மகளே!
முட்டி மோதும் உன் நினைவுகளை
ஈராண்டென்ன எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் மறவோம் அம்மா.

*T.C. லேன்,
சங்கானை.* (37231) (24-16)

***க.நாகரத்தினம் (செல்வம்)
குடும்பத்தினர்.***

### மருந்தாளர் பரீட்சை

குருநகர், ஜூலை4
வெளிவாரி மருந்தாளர் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் , 17 ஆம் திகதிகளில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என இப்பயிற்சி நெறியின் இணைப்பாளர் ஆ.மகாதேவன் அறிவித்துள்ளார்.
(எ-51)

### நினைவுப் பேருரை

நல்லூர், ஜூலை4
திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இன்று நடைபெறவுள்ள இந்து போட் இராசரத்தினத்தின் 121 ஆவது ஆண்டு நினைவுப் பேருரையை முன்னாள் கல்வி அதிகாரி சி. இராசநாயகமே நிகழ்த்துவார். சி. இராசரத்தினம் அல்ல. (எ-111)

# குருநகரில் கலாசார மண்டபம் திறப்பு

பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட குருநகர் கலாசார மண்டபம் நேற்றுமுன்தினம் சம்பிரதாயபபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

குருநகர் சனசமூக நிலையத் தலைவர் எஸ்.யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் முன்னாள் பங்குத் தந்தை வண.பிதா பி.எம்.இம்மனுவேல் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

யாழ். மாநகர சபையின் முன்னாள் விசேட ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண. பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராசா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

SAAMSTECH இன்
தகவல் தொழில்நுட்பப்பிரிவு

யாழ்ப்பாணத்தில் முதல். முறையாக
TECHNICAL TEAMS

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் அதிகமான தொழில் வாய்ப்புகளைக்கொண்ட பாடநெறிகளோடு

**WEB TEAM**
HTML, CSS, Java Script, ASP, PHP, ACCESS, My SQL, Nuke, Mambo, Flash, Frontpage, Dreamweaver, Code Charge

**MULTI MEDIA TEAM**
Powerpoint, SnagIT, Camptasia, Impartica, Flash, Director, Authorware, ASP, Access, Multimedia Tools

**PROGRAMMERS TEAM**
VB, Java, DOT.NET, with Latest Databases


100% செயல்முறைகளை அடிப்படையாகக்கொண்டது

பயிற்சிக்கட்டணம் ரூபா 8000/-
ஒவ்வொரு பிரிவிலும் 40 பேர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்

ஒவ்வொரு குழுவிலும் சிறப்பாகச் செய்வோர் SAAMSTECH இன் இணையத்தளங்கள் மற்றும் பல்லூடக விருத்தியாக்கங்களில் பணிபுரிய சேர்த்துக்கொள்ளப்படுவர்

SAAMSTECH
Center for English and Information Technology
841, HOSPITAL RD, CHUNDIKULI, JAFFNA. 021 - 4591571

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பேராசிரியர்
**செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)**

தோற்றம்: 30.03.1928

மறைவு: 04.06.2005

கடந்த 04.06.2005 ஆம் திகதி அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் அவர்களின் நினைவாக இன்று (04.07.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல், அனுதாப அட்டைகள், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

88/2, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(37218)(16-29)

நந்தி
குடும்பத்தினர்.

12ஆவது ஆண்டில் 12 ஆவது கிளை பரந்தனில்

05.07.2005

பன்முகப்படுத்தப்பட்ட
வைப்புத்திட்டங்கள்
கடன் திட்டங்கள்
வைப்பகத்தின் ஏனைய பணிகள்
என்பவற்றுடன்
மக்கள் நலன் கருதி
எங்களின் மண்ணின் வளமும் நலனும் பேண
உறுதிபூண்டு நிற்கிறது

உங்கள்
நம்பிக்கையின்
சின்னம்

(C/43837)(16-29)

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

## வேலையாள்கள் தேவை

ஒப்பந்த அடிப்படையில் மின்சாரசபை, ரெலிக்கொம், ஏனைய வேறு வேலைகள் செய்வதற்கு ஆள்கள் தேவை. 18 - 35 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. 04.07.2005 - 10.07.2005 இற்கு முன்பு தொடர்புகொள்ளவும்.

பகுதிநேர வேலையாக இரவுவேலை தரப்படும்.

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

சுன்னாகம் கிழக்கு, கந்தையா வீதி,
இலஷ்சுமி தொலைத்தொடர்பகம்,
T.P.: 021 4591938

(37268)(26-14-45)



SPOKEN ENGLISH
*AND GRAMMAR*

புதிய பிரிவு
ஆரம்பம்: 05.07.2005
செவ்வாய்
இடம்: COLLEGE OF MATHS
அளவெட்டி
நேரம்: காலை 8.30
வகுப்புகள் செவ்வாய், வியாழன்
**By: Britto.**

(சி-43847)



உ
## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்**
கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி).
யாழ்ப்பாணம்.
T.P.: 021 2225680.


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 25 - 04 - 1946
உதிர்வு 05 - 06 - 2005



**அமரர் குமாரன் தம்பிராசா (சின்னவர்)**

எங்கள் குடும்பத் தலைவர் அமரத்துவமடைந்ததும் ஓடோடி வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், எமக்குச் சகல விதத்திலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்ட நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (05.06.2005) செவ்வாய்க் கிழமை காலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

'கல்லுவத்தானி',
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
(37215)(26.14.45)

### நேர்முகப் பரீட்சை

யாழ்.மாவட்டத்தில் மத்தியஸ்தர் சபைகளை நிறுவுவதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் நீதியரசர் தர்மசிறி ஜயவிக்ரம இது தொடர்பாக யாழ்.அரசஅதிபருக்கு அறிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

யாழ்.மாவட்டத்தின் பத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற பெயர் குறித்த நியமனங்களிற்கிணங்க கடந்த நாள்களில் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. உடுவில், சண்டிலிப்பாய், கரவெட்டி, தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகளை அமைப்பதற்காக நடத்தப்படவிருக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்கான தினங்கள் மற்றும் நேர அட்டவணைகள் விரைவில் அறிவிக்கப்படும்.(எ-76)


## SAAMSTECH இன்
## ஆங்கில நேரடி வகுப்பு

க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத்தோற்றியோருக்கான பிரிவு ஆரம்பம்
காலம் : 3 மாதங்கள் சலுகைகட்டணம் : ரூபா 3000/-
கற்பித்தல், உரையாடல், மற்றும் ஒலிப்பயிற்சி அடிப்படையிலான வகுப்பு மூலமாக முழுமையாகக் கதைக்கலாம்
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்
**SAAMSTECH, 841, HOSPITAL RD, JAFFNA**
**Ph : 021 - 4591571**



உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட சலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=



**திருமுருகன் கொம் நெற்**

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253


# தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வ -து]
## கைதடி
# கிளைக்குழு உறுப்பினர் தெரிவுக்கான அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028/ G இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997-02-17ஆம் திகதிய 963/1 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களைப் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

1. இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
2. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (¼) பங்கினர் அல்லது 25பேர் அதில் எதுகுறைவோ அத்தொகையாகும்.
3. தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் குறைந்தது இருவராவது (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல்வேண்டும்.
4. சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
5. இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
6. தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

தகுதியுள்ள கிளைப்பொதுச்சபை உறுப்பினர்களுக்குக் கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள உறுப்பினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு இக்கிளைப் பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் திகதியில் தங்களுக்குரிய கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவுசெய்யுமாறு வேண்டுகின்றோம்.

**நாள்: 16-07-2005 சனிக்கிழமை நேரம்: முற்பகல் 10 மணி**

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் இடம்பெறும் இடம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தை நடத்தும் தவிசாளர் |
|---|---|---|---|
| 01 | கைதடி வடக்கு | கைதடி வடக்குக் கிளைக்கட்டடம் | திரு.ச.பாலக்குமார் |
| 02 | கைதடி மத்தி | கைதடி மத்திய கிளைக்கட்டடம் | திரு.சு.கணேசு |
| 03 | கைதடி மேற்கு | கைதடி மேற்கு கிளைக் கட்டடம் | திரு.இ.பாலச்சந்திரன் |
| 04 | கைதடி தெற்கு | சங்கத் தலைமைக் காரியாலயம் | திரு.வி.ஜெயந்தன் |
| 05 | நாவற்குழி | நாவற்குழி கிளைக் கட்டடம் | திரு.க.திசாகரன் |
| 06 | கோயிலாக்கண்டி | நாவற்குழி பிரதேச சபை உப பணிமனை | திரு.இ.புவன்ராஜ் |
| 07 | கைதடி நாவற்குழி | சங்கத் தலைமைக் காரியாலயம் | திரு.செ.திருச்செல்வம் |
| 08 | மறவன்புலோ | சங்கத் தலைமைக் காரியாலயம் | திரு.சோ.குமாரவேலு |
| 09 | தனங்கிளப்பு | சங்கத் தலைமைக் காரியாலயம் | செல்வி ப.கிருஷ்ணபவானி |
| 10 | கைதடி நாவற்குழி தெற்கு | கைதடி நாவற்குழி தெற்கு கிளைக்கட்டடம் | திரு.சு.கலாதீபன் |
| 11 | கோயிலாக்கண்டி மத்தி | கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் | திரு.தி.நவநீதன் |

ஒப்பம்பு: **செ.கனகசபாபதி,**
கூ.அ.உ.ஆணையாளர் (யாழ்.மாவட்டம்).

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(சி-43843)(26-14-45)

# காப்புறுதி முகவர்கள் என்று கூறி பணமோசடி செய்யும் ஆசாமிகள்!

## அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்து

கிளிநொச்சி,ஜூலை4

கிளிநொச்சிப் பிரதேசத்தில் போலிக் காப்புறுதி முகவர்கள் சிலர் மக்களை ஏமாற்றிப் பணம் கறக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர் என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக பல்வேறு காப்புறுதி நிறுவனங்களினது பெயர்களைக் கூறி அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள், முகவர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் நபர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கொள்கைகளை மக்களுக்கு விளக்கி வருகின்றனர்.

அலுவலகங்கள், பாடசாலைகள், குடியிருப்புக்கள் என்று பல்வேறு இடங்களிலும் இவர்கள் தமது பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய காப்புறுதி முகவர்களில் சிலர் போலி நபர்கள் என்றும் பணமோசடிக்காகவே அவர்கள் தம்மைக் காப்புறுதி முகவர்கள் என்ற கூறிக்கொண்டு நடமாடுகின்றனர் என்றும் இப்போது தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன.

இத்தகைய முகவர்களின் விளக்கங்களினால் கவரப்பட்ட மக்கள் பலர் அவர்களிடம் முதற்கட்டமாக காப்புறுதிப் பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

சில முகவர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. உதயநகர் பகுதியில் 3 குடும்பங்கள் இவ்வாறு பணத்தைச் செலுத்தி ஏமாந்துள்ளனர்.

இதேவேளை -

காப்புறுதி நிறுவனங்களுக்கோ அவற்றின் முகவர்களுக்கோ கிளிநொச்சியில் அலுவலகங்கள் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, இவர்கள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-301)

# கரும்புலிகள் தினத்தை முன்னிட்டுச் சிரமதானம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு ஸ்கந்தபுரம் பொதுச்சந்தையில் சிரமதானப் பணி இடம்பெற்றது.

தேசிய எழுச்சிப் பேர்வையும் அக்கராயன் பிரதேச அரசியல்துறையும் இணைந்து ஏற்பாடு செய்த இச்சிரமதானப் பணியில் பிரதேச வர்த்தகர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (த-381-202)

# தமிழீழ வைப்பக திறப்பு விழா

பரந்தன்,ஜூலை4

பரந்தனில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ வைப்பகத்தின் 12ஆவது கிளைத்திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு வங்கியின் வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கப்பட்டுள்ளது. (எ-352-203)

# 'ஒக்ஸ்பாம்' நிறுவன உதவியுடன் பொதுமண்டபங்கள் அமையும்

ஸ்கந்தபுரம்,ஜூலை4

'ஒக்ஸ்பாம்' நிறுவன நிதியுதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்ப்பாட்டில் காந்தி கிராமம், யூனியன்குளம் ஆகிய பகுதிகளில் பொதுமண்டபங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றுக்கான அடிக்கற்கள் அண்மையில் நட்டுவைக்கப்பட்டன.

கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத் தலைவர் இரா.இராமச்சந்திரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் காந்திகிராமம் பொதுமண்டபத்திற்கான அடிக்கல்லை 'ஒக்ஸ்பாம்' பிரதிநிதி பி.கெலன் லவ்லியும் யூனியன்குளம் பொதுமண்டபத்திற்கான அடிக்கல்லை ஒக்ஸ்பாம் பிரதிநிதி சுதாவும் நட்டுவைத்தனர்.

இந்த நிகழ்வுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவிப் பணிப்பாளர் கே.நல்லையா, கிராம அலுவலர் அருந்தமிழ்ச்செல்வன், ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் வேந்தன், அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சண்முகம் உட்பட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-381-202)

# கஷ்ட, அதிகஷ்ட கொடுப்பனவுகள் முல்லை. ஆசிரியர்களுக்கு இல்லை!

அளம்பில்,ஜூலை4

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகள் நீண்ட காலமாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் இப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் கடமையாற்றிவருகின்றனர்.

அத்துடன், ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முல்லைத்தீவு வலயப் பாடசாலைகள் பலவும, அவற்றை அண்டிய பிரதேசங்களும் பெருமளவு பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில், பல்வேறு பாதிப்புகள், சிரமங்களுக்கு மத்தியில் சேவையாற்றிவரும் இந்த ஆசிரியர்களுக்கு கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்க உரியதரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-116)

# தட்டுவன் கொட்டி கிராமத்தில் 110 வீடுகள் மக்களிடம் கையளிப்பு

'ஜி.ரி.இசற்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட தட்டுவன்கொட்டி கிராம முன்னேற்ற மீள்குடியேற்றத் திட்டம் கிராம மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இக்குடியேற்றத் திட்டம் கையளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்ட இணைப்பாளர் இ.ராஜன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் இல்லங்களின் பணிப்பாளர் இ.ரவி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வே.கெங்காதரனும் ஏற்றிவைத்தனர்.

குடியேற்றத் திட்டத்தின் பெயர்பலகையை திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் செல்வின் திரை நீக்கம் செய்துவைத்தார். கிராமத்துக்கான பொதுநோக்கு மண்டபத்தை ஜீ.ரி.இசற் நிறுவன திட்ட ஆலோசகர் கரட்பார் நாடாவெட்டி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். தொடர்ந்து வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனையடுத்து மரநடுகை நிகழ்வும் கருத்துரைகளும் இடம்பெற்றன.

முன்னோடி மீள்குடியேற்றத்திட்டமான இக்குடியிருப்பில் 49 மில்லியன் ரூபா செலவில் 110 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு மேலும் 100 வீடுகள் அமைக்கப்படும் என்றும் இக்கிராமத்திற்குத் தேவையான பாடசாலை, முன்பள்ளி என்பனவும் அமைக்கப்படும் என்றும் ஜீ.ரி.இசற் திட்ட ஆலோசகர் கருத்துரை நிகழ்த்தும் போது தெரிவித்தார். (த-352-305-202)

# இரணைதீவு றோ.க.பாடசாலையில் விடுதி இல்லாது ஆசிரியர் சிரமம்

வெள்ளாங்குளம்,ஜூலை4

இரணைதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆசிரிய விடுதி இல்லாமையால் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பின்தங்கிய பிரதேசத்தில் இயங்கிவரும் இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் தூர இடங்களைச் சேர்ந்தவர்கள்.

இப்பாடசாலையில் ஆசிரியர் விடுதி ஒன்று இல்லாமையால் தூர இடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கற்பிப்பதற்குப் பின்னடிக்கின்றனர்.

வருகைதரும் ஆசிரியர்களும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே கற்பிக்கின்றனர்.

எனவே, அங்கு ஓர் ஆசிரியர் விடுதியை அமைக்கவேண்டும் என்று ஆசிரியர்களும் பெற்றோர்களும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இப்பாடசாலையில் மாணவர்களுக்கான மலசலகூட வசதியும் இல்லை. இதனால், மாணவர்களும் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த-415-202)




# பெற்றோர் விழிப்புணர்வுச் செயற்பாடு

கற்சிலைமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் கடந்த 28ஆம் திகதி பெற்றோர் விழிப்புணர்வுச் செயற்பாடு மிகவும் சிறப்புற இடம்பெற்றுள்ளது.

பாடசாலை ஆசிரியர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை வித்தியாலய முகாமைத்துவப் பொறுப்பாசிரியர் பாஸ்கரன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியினை வித்தியாலய துணைமுதல்வர் எஸ்.சிவனேசன் ஏற்ற மங்கள விளக்கினை பெற்றோர்களான ந.சந்திரன், த.சித்திராதேவி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவபாலராசா, ஆசிரியை திருமதி காந்தமலர் ஆகியோர் கருத்துரை வழங்கினர். தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையிலான சிறார்களின் செயற்பாட்டுத்திறன்களை நேரில் சென்று பார்த்தும் கேட்டும் அறிந்தும் கொண்டனர். நிகழ்வில் 100 இற்கும் மேற்பட்ட பெற்றோர் கலந்துகொண்டனர். (த-341)

# சுனாமியால் அழிந்த தபாலகத்தை புதிதாக அமைக்க இடவசதி இல்லை

புதுக்குடியிருப்பு,ஜூலை4

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பிரதம தபாலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் போதிய இடவசதி செய்து கொடுக்கப்படாமையால் புதிய கட்டடத்தை நிர்மாணிக்க முடியாதுள்ளதாகத் தெரியவருகிறது.

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த பிரதம தபாலகம், பிரதம அத்தியட்சகர் அலுவலகம் என்பன கடந்த வருட முற்பகுதியில் இடம்பெற்ற ஆழிப்பேரலையால் முற்றாக அழிவடைந்துவிட்டன.

இந்த அலுவலகங்கள் இரண்டையும் புனர்நிர்மாணம் செய்வதற்கென பெருமளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், நகரப் பகுதியில் இதற்குரிய வசதியான இடம் தெரிவுசெய்யப்படாதபடியால் அவற்றை அமைப்பதில் இழுபறிநிலை காணப்படுகின்றது.

இந்த அலுவலகங்களில் பிரதம தபாலகம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் ஒரு சிறிய அறையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தற்போது செயற்பட்டு வருகிறது. அங்கு போதிய இடவசதி, மலசலகூட வசதி என்பன இல்லாமையால் அங்கு பணிபுரிகின்ற அலுவலர்களும் தேவைகளை நிறைவேற்ற வரும் பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

முல்லை. மாவட்டத்திற்கான விளையாட்டு அதிகாரிக்குரிய பணிமனையும் இத்தபாலகம் இயங்கும் அறையின் ஒரு பகுதியிலேயே இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதம தபால் அத்தியட்சகர் அலுவலகம் தற்போது முள்ளியவளை தபாலகக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

இந்த நிலையில் மேற்படி அலுவலகங்களைப் புதிதாக நிறுவுதவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், அதற்கான புதிய இடத்தைத் தெரிவு செய்வதில் இழுபறி நிலை காணப்படுகிறது. (த-410-353)



ஆனையிறவு உப்பளத்தில் அமைக்கப்பட்ட பெண்களுக்கான விடுதி கடந்த 30ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. 70 லட்சம் ரூபா செலவில் 12 கட்டடத் தொகுதிகள் கொண்டதாக இந்த விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

விடுதியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் சம்பிரதாய பர்வமாக நாடாவெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் வட பிராந்திய பணிப்பாளர் கரட்பார் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: மு.கந்தசாமி, பரந்தன் செய்தியாளர்)

# தகவல் தொழில்நுட்பப் பூங்கா

# INFORMATION TECHNOLOGY PARK

*MPCS Building, 127, K.K.S Road, Jaffna, SriLanka.* Phone :021 222 3641 / Fax : 021 222 3643

எமது நிறுவனத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விரும்பிய, கீழே தரப்பட்ட கற்கை நெறிகளுக்கான பதிவுகளை **15-07-2005** வரை மேற்கொள்ளலாம்.

## Diploma Courses

* Dip.in MS-Office
* Dip.in Desktop Publishing
* Dip.in Hardware Technology
* Dip.in Computer Programming

வகுப்புக்கள் ஆரம்பம்
வார நாள் - 15-07-05
வார இறுதி நாள் - 16-07-05

## Certificate Courses

* MS-Word
* MS-Access
* MS-Excel
* PageMaker
* CorelDRAW
* AutoCAD
* VisualBasic
* Java
* Oracle

கற்கை நெறிக்கான
பதிவுக் கட்டணம் : **250/-**

## Workshops

* PC Maintenance & Repairs
* Typesetting & Graphic Designing

## Online Classes

* Dip.in PC Application & Office Management

(அரச, தனியார் உத்தியோகத்தருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது)

**Center for Information Technology**

*-Executive Officer*

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சு

**Ministry of Agricultural Marketing Development, Co-operative Development, Hindu Affairs and Assisting Education and Vocational Training**



# முதலாம் ஆண்டு நினைவு

அமரர்

## வேலுப்பிள்ளை மார்க்கண்டேயபிள்ளை

(ஓய்வுபெற்ற மின்பொறியியலாளர் - தரம் II)

தோற்றம்: 19.02.1943 மறைவு: 14.07.2004







ஆண்டு ஒன்று அவசரமாய் ஓடிமறைந்தாலும்
கண்களில் நீர் ஆறாய் ஓடி நிற்கின்றது
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - எங்கள்
ஆருயிர் அப்பாவின் அரவணைப்புக்கு
ஈடாகுமா?
வாசமலரது போல் வாராது வந்துதித்த தெய்வம்
வான்னுலகில் இருந்து எங்களை வாழ்விக்கும்
நாம் போகின்ற பாதை எங்கும் எங்கள்
அப்பாவின் அழகுமுகம் தோன்றுகின்றது!
மானிட வாழ்க்கையில் மறுபிறப்பொன்று
உண்மையானால்
மறுபடியும் பிறந்து வாருங்கள் அப்பா.

சாளம்பை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(C/43793) (54-14-34)

# யாழ்.பாடசாலைகளுக்கு இடையில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

## நீண்ட இடைவெளிக்குப்பின் ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஜுலை4

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் - 14,16,19 வயதுப் பிரிவுகளுக்கு இடையில் - உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் உதைபந்தாட்டத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இச்சுற்றுப்போட்டி நடத்தப்படவிருக்கின்றது.

அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம், தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பிரிவு, யாழ்.கல்விக்கழகம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இச்சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலைகள் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் பேர்ட்டி பனிஸ்ரருடன் தொடர்புகொள்ளுமாறு அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் இணைப்பாளர் கே.இராஜதுரை கேட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நீண்டகாலத்தின் பின் இவ்வருடம் நடத்த ஏற்பாடாகியுள்ளது. (3-190)

## அம்பாறை அணிகள் மாகாண சம்பியனாகின



வலி.வடக்கு,ஜுலை4

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள், பெண்களுக்கான பிரிவுகளில்அம்பாறை மாவட்ட அணிகள் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுளளன.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியும் யாழ்ப்பாண மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. இதில் அம்பாறை மாவட்ட அணி வெற்றிபெற்றது.

மூன்றாவது இடத்தைக் கிளிநொச்சி மாவட்டஅணியுடன் மோதிய வவுனியா மாவட்ட அணிபெற்றுக்கொண்டது. பெண்களுக்கான இறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

அம்பாறை மாவட்ட அணிமுதல் இரண்டு செற்றுக்களையும் முறையே 25:09, 25:16 என்று வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை மட்டக்களப்பு மாவட்ட அணியுடன் மோதிய யாழ்ப்பாண மாவட்ட அணி பெற்றுக்கொண்டது. (3-86)

## கொரிய விளையாட்டு விழாவில் முல்லை மாணவனும் பங்கேற்பு

முல்லைத்தீவு,ஜுலை4

கொரியாவில் நடைபெறவுள்ள உலக சமாதானத்திற்கும், ஐக்கியத்துக்குமான விளையாட்டு விழாவில் முல்லைத்தீவிலிருந்து ஒருவர் பங்குபற்றவுள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த விளையாட்டுவிழாவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த சகாயரட்ணராஜா-நிரஞ்சன் என்பவரே பங்குபற்றுவதற்காகக் கொரியா செல்லவுள்ளார்.

இவர் அங்கு 400மீற்றர், 800 மீற்றர் ஆகிய போட்டிகளில் பங்குபற்றவுள்ளார். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவரான இவர் கடந்த வருடம் கொழும்பில் இடம்பெற்ற கனிஷ்ட தேசிய மெய்வன்மைப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாமிடத்தையும் 800 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கடந்த வருடம் இடம்பெற்ற மாவட்டமட்டப் போட்டிகளில் இவ்விரு போட்டிகளிலும் முதலாமிடத்தைப் பெற்ற இவர் தொடர்ந்து இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதல் இடங்களையும் பெற்ற துடன் மாகாணச் சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டவர்.

இவரைக் கொரியாவுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைத் தமிழீழ விளையாட்டுத்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (3-410)

## இன்றைய ஆட்டங்கள்

அஸ்ரா கிண்ணத்திற்கான அகில இலங்கை ரீதியில் யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான 15வயதுப் பிரிவினருககான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி யில் இன்று நடை பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**ஏ.பிரிவு**

பெரியபுலம் மகா வித்தியாலயம் எதிர் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்
(பெரியபுலம் வித்தியாலய மைதானம்).

- விக்ரோறியக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி,
(விக்ரோறியக் கல்லூரி மைதானம்).
- உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி
(உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மைதானம்).

**பி.பிரிவு**

- சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி
(சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்),
- சென் ஜோன்ஸ் கல்லூரி எதிர் கிளிநொச்சி மகா வித்தியாலயம்
(சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்).

**சி.பிரிவு**

- விக்கினேஸ்வரக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி
(விக்கினேஸ்வரக் கல்லூரி மைதானம்)
- கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி
(கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானம்)
- மகாஜனக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி
(மகாஜனக் கல்லூரி மைதானம்).(3-190)

✠ ✠ ✠

யாழ்.மாவட்டத் தாச்சிச்சங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தனது மைதானத்தில் யாழ்.மாவட்ட ரீதியில் லீக் முறையில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இணுவில் கலாஜோதி வி.கவும் சுதுமலை புவனேஸ்வரியம்பாள் வி.கவும் மோதவுள்ளன. (3-75-203)

✠ ✠ ✠

கைதடி,ஜுலை4

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி ரீதியில் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி துர்க்கா வி.கவும் கைதடி மதிஒளி வி.கவும் மோதுகின்றன. (3-75-203)

✠ ✠ ✠

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் தென்மராட்சி விளையாட்டுப் பேரவை கைதடி மேற்கு விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்திவரும் வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

- மாலை 6.30 மணி - வறணி மதிஒளி வி.க.எதிர் நாவற்குழி சரஸ்வதி.வி.க.
- இரவு 7.30 மணி - வறணி இளைஞர் வி.க. எதிர் மின்னொளி வி.க. (3-203)

✠ ✠ ✠

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் தென்மராட்சி உதைபந்தாட்டச் சங்கம் கைதடிமேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

- பிற்பகல் 4மணி - பிக்யூட் வி.க. எதிர் உத்தமன் வி.க.
- மாலை 5மணி - கதிரொளி வி.க. எதிர் கைதடி சரஸ்வதி வி.க. (3-203)

## அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட்:

## மானிப்பாய் இந்து வெற்றி

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆட்டம் ஒன்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இதில் மானிப்பாய் இந்து வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 68 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் சுதர்சன் ஆகக்கூடிய ஓட்டங்களாக 24 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

வினோத் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கரிகரன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 5 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

வினோத் 67 ஓட்டங்களையும், தினேஷ் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

சயந்தன் 03 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியினர் 94 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

சயந்தன் 19 ஓட்டங்களையும், தன்ராஜ் 14 ஓட்டங்களையும், வினோஜன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

வினோத் 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (3-86)

## விக்னேஸ்வரா வெற்றி

யாழ்ப்பாணம்,ஜுலை4

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிய 15 வயதுப் பிரிவு ஆட்டத்தில் விக்னேஸ்வரா வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வரா 42.4 ஓவர்களில் 135 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கஜீந்திரன், நிதர்சன் ஆகியோர் முறையே 37, 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

சி.கோமளவரதன், நிகேதன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 221 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. கஜானுஜன், நிகேதன் ஆகியோர் 37, 27 ஓட்டங்களைப் பெற்றனர். நிதர்சன், சிந்துஜன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

2 ஆவது இன்னிங்ஸ்ல் விக்னேஸ்வரா 3 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. புள்ளி அடிப்படையில் விக்னேஸ்வரா வெற்றிபெற்றது.

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

வலி.வடக்கு,ஜுலை4

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வெற்றிகொண்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடந்த 17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 6 விக்கெட்டுக்களை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

கே.மயூரன் 86 ஓட்டங்களையும் கே.ஜோய் 38 ஓட்டங்களையும் ச.சுதர்சன் 36 ஓட்டங்களையும் பெற்றனர். இராஜ்குமார் 47 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 176 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

சயந்தன் 42 ஓட்டங்களையும் நிரோஜன் 34 ஓட்டங்களையும், ரஜீவன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பி.செந்தூரன் 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஜே.ஜோய் 18 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் ஜே.செந்தூரன் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைபற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸ்ல் யாழ்ப்பாணக் கல்லூரி 3 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுதர்சன் 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். றஜீவன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (3-86)

## யாழ்.மத்திய கல்லூரி வெற்றி

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 15 வ்யதுப் பிரிவு ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

சிவகரன் 64 ஓட்டங்களையும், ஜேம்ஸ் யோண்சன் 28 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

நவநீதன் 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டையும், பாலமுரளி 17 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. பிரணவன் 47 ஓட்டங்களையும் வென்சகர் 23 ஓட்டங்களையும் எவன்சன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

மயூரன் 31 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டையும் சிவகரன் 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டையும் கோபிகன் 5 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டையும் வீழ்த்தினர். இரண்டாவது இன்னிங்ஸ்ல் யாழ். மத்திய கல்லூரி அணி 2 விக்கெட்டினை இழந்து 60 ஓட்டங்களைப்பெற்றது.

பிரதீபன் 21 ஓட்டங்களையும், மயூரன் 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

நவநீதன் 36 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் வீழ்த்தினார்.

**விளையாட்டு**

## 3 ஆட்டங்களில் யூனியன் வெற்றி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 15 வயதுப் பிரிவில் பங்குபற்றிய மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்றது.

ஸ்கந்தாவுடன் நடந்த முதலாது ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 6 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. சேவியர் சுதர்சன் 84 ஓட்டங்களையும் துஷ்யந்தன் 56 ஓட்டங்களையும் பெற்றனர். கஜீவன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஸ்கந்தா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. கௌதமன், கஜீபன் ஆகியோர் 25, 24 ஓட்டங்களை முறையே பெற்றனர். அருண், காந்தசீலன் ஆகியோர் 6, 3 விக்கெட்டுக்களை முறையே வீழ்த்தினர்.

பெரியபுலம் ம.விக்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையில் நடந்த மற்றோர் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. காந்தசீலன், 56 ஓட்டங்களைப் பெற்றார். பிரதீஸன், இன்பராஜ் ஆகியோர் முறையே 6, 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் 105 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ரகுதரன், பிரதீஸன் ஆகியோர் 25, 20 ஓட்டங்களைப் பெற்றனர். டினேஷ், காந்தசீலன், அருண் ஆகியோர் 4, 3, 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதில் யூனியன் கல்லூரி வெற்றிபெற்றது.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலைக்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையில் நடந்த ஆட்டத்திலும் யூனியன் வெற்றிபெற் றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் 9 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. மதிதரன், கோகுலதீபன் ஆகியோர் முறையே 44, 32 ஓட்டங்களைப் பெற்றனர். அருண், காந்தசீலன், டினேஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. றஜிந்தன், சுதர்சன், யுவராஜா ஆகியோர் 38, 32, 26 ஓட்டங்களைப் பெற்றனர். சியாந்தன், நிகிர்ந்தன் ஆகியோர் 5, 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 02 - 1979



உதிர்வு 14 - 07 - 2004

### செல்வி செல்லத்துரை ஜெயரூபி (பட்டு)

திதி: 04-07-2005

ஆண்டு ஒன்றுபோனதோ - பட்டு
ஆறவில்லை எம் இதயம்
இன்று வரை நம்பவில்லை - நீர்
இறைபதம் சேர்ந்தீரென்று
வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமோ உம்முகத்தை
வருத்தி நாம் அழைக்கின்றோம்
திரும்ப வந்து சேர்ந்திடுவீர்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(37239) (24-16)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு செல்வநாயகி



மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வநாயகி 26.06.2005 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற முருகேசுவின் (சீனி) அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோரியடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"செல்வபவனம்"
மாதனை,
பருத்தித்துறை.

(37283) (39-24-16)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.




அன்று தலைநகரில் இன்று தாய் மண்ணில் தொடர் வெற்றி நடைபோடும் கொழும்பு, நிதம்ஸ், மாருதம்ஸ் ஸ்ருதி & சித்திரா இசைக்குழு புகழ் "இசைவாருதி" யாழ் ஜேம்ஸ் அன்ரனின் பிரண்ட்ஸ் இசைக்குழுவுடன் தமிழீழ எழுச்சிப்பாடகர் "நித்திரையா தமிழா" புகழ் ஜே.ஆர் சுகுமார் இணைந்து மற்றும் தமிழீழ இசைவட்ட போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற சிறந்த பாடகர்களான S.K. நாதன், செபஸ்ரியன் மற்றும் சிங்கப்பூர், மலேசியா புகழ் S. தயாளன், றீகன்ராஜ் இவர்களுடன் பல முன்னணி இளம் பாடகிகளுடன் நவீன ஒலியமைப்பு, இசைக்கருவிகளின் மூலம் புத்தம் புதிய, இனிய இடைக்கால, பழைய பாடல்களையும் உங்கள் ரசனைக்கேற்றவாறு அள்ளி வழங்கக் காத்திருக்கின்றோம்.

சுகுமார் பிரண்ட்ஸ் இசைக்குழு தொடர்புகளுக்கு:
ஜேம்ஸ் அன்ரன்
11. சென்.மேரிஸ்,
கொழும்புத்துறை.
T.P.:0776366038

(37270)

## டயலொக் டெலிகொம் ஆரம்ப பொது வழங்கல்

டயலொக் ஆரம்ப பொது வழங்கல் குறித்த அறிமுகம் இடம்பெறவுள்ளது.

காலம் : ஜூலை 4ம் திகதி 2005
நேரம் : மு.ப. 11.00 மணி
இடம் : வரையறுக்கப்பட்ட யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

நீங்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பினால் தயவுசெய்து யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியில் உள்ள திரு.வசந்தகுமார் அவர்களுடன் தொடர்புகொண்டு அழைப்பிதழ்களைப் பெறமுடியும்.

அழைப்பிதழ் பெறுவதன் மூலமே இதில் பங்குபற்றமுடியும்.

தொலைபேசி: 021 2227882, 021 2223463,
021 2222787, 0777 164966

(சி/43821)

## மின்னிணைப்பு தொழிற்பயிற்சி

நவாலி, ஜூலை4

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் வீட்டு மின்னிணைப்பு தொழிற்பயிற்சியை வழங்குவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் தரம் 10 இல் கல்வி கற்றிருப்பதுடன் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

பயிற்சி வகுப்பில் இணைந்து கற்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் "இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், பிரதேச செயலகம் முன்பாக சண்டிலிப்பாய்" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)

## SPOKEN ENGLISH AND GRAMMAR

புதிய பிரிவு

ஆரம்பம் :
(இன்று) 04.07.2005 திங்கட்கிழமை
இடம்:
கொக்குவில் ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்
நேரம்:
காலை 7.30 மணி
வகுப்புகள்: திங்கள், புதன்
By: BRITTO

(C-43845-25-24-16)

## SPOKEN ENGLISH AND GRAMMAR

புதிய பிரிவு

ஆரம்பம்:- 05.07.2005 செவ்வாய்
இடம்:- சாபி கல்வி நிறுவனம்
(SHORT HAND TYPING பயிலும் இடம்,
மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)
நேரம்:- முற்பகல் 11.30 மணி
வகுப்புகள்:- செவ்வாய், வியாழன்

(சி-43846) (29/16/24)

BY: BRITTO

# மீண்டும் புதுப்பொலிவுடன்



# SVP சீவம்ஸ்

கடந்த 33 வருட காலமாக யாழ். மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வந்த

## SVP சீவம்ஸ்

(DEALERS IN TEXTILES & FANCY GOODS READY MADE GARMENTS)
ஸ்தாபனத்தார்

தற்சமயம் மீண்டும் புதுப்பொலிவுடன் குளிரூட்டப்பட்டு இன்று(04.07.2005) திங்கட்கிழமை முற்பகல் 11.57 முதல் பிற்பகல் 1.27 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் திறந்துவைக்கப்படுகின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களின் நல் ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

(37279)

SVP சீவம்ஸ் DEALERS IN TEXTILES

14A, மின்சார நிலைய வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம், T.P.: 6749.

# ஈழத்தமிழரின் வீர வரலாற்றில் அழியா இடம்பெற்ற கரும்புலிகள்

தமிழ் மண்ணின் விடிவிற்காக தம்மை அர்ப்பணித்த கரும்புலிகளை நினைவுகூரும் நிகழ்வுகள் தமிழர் தேசம் எங்கும் நாளை நடைபெறவுள்ளது. கரும்புலிகளின் பேராற்றல் குறித்து விளக்குகிறார் கட்டுரையாளர்.

உலக விடுதலை வரலாற்றினை உன்னிப்பாகக் கவனிக்கும் எவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற வீரம் செறிந்த வரலாற்றினைப் படைக்கும் ஓர் இயக்கம் இல்லை என்பதனை ஏற்றுத்தான் ஆகவேண்டும். விடுதலைப் புலிகளோடு வீர வரலாற்றினை நாம் எண்ணுகின்ற பொழுது, நெல்சன் மண்டேலாவின் தலைமையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற கறுப்பர்களின் போராட்டத்தையும், மறைந்த தலைவர் அரபாத்தின் தலைமையில் நடைபெற்ற பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் ஒப்புநோக்குவதுண்டு, இன்று தென்னாபிரிக்காவில் கறுப்பர்கள் விடுதலை பெற்றுள்ளனர். பலஸ்தீனத்தைப் பொறுத்தவரையில் ஜசீர் அரபாத்தின் மறைவையடுத்து ஒரு குழப்பநிலை அங்கு நிலவுகின்றது.

பலஸ்தீனத்தைப் பொறுத்தவரையில் இழந்த நாட்டை மீட்பதற்காகப் போராடுகின்றார்கள். நாமோ இருக்கின்ற நாட்டை இழக்காதிருக்கப் போராடுகின்றோம். மேற்குறித்த இரு நாடுகளுக்கும் வெவ்வேறு நாடுகளில் ஆதரவு இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் உலக நாடுகளின் ஆதரவற்ற நிலையிலும் எதிர்ப்புக்கிடையிலும் எமது போராட்டம் தொடர்கின்றது. எனினும், பொதுக்கட்டமைப்பிற்கு அரசும், விடுதலைப் புலிகளும் கையொப்பம் இட்ட நிலையில் உலக நாடுகளின் ஆதரவு ஓரளவு எம்பக்கமில் உருவாகி வருவது வரவேற்கத்தக்கது.

நாம் முன்பே குறிப்பிட்டதற்கமைய விடுதலைப் புலிகள் போன்று வீரம் செறிந்த வரலாற்றினை - தியாகம் நிறைந்த வரலாற்றினை வேறு எவரும் நிலைநாட்டியதில்லை. எம்மைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் ஏறக்குறைய பதினெண்ணாயிரம் விடுதலைப் போராளிகளை இழந்துள்ளனர். இரு இனங்களுக்கிடையே மோதல் ஏற்பட்டதன் காரணமாக ஏறக்குறைய அறுபதினாயிரம் தமிழ் பொதுமக்களையும் நாம் இழந்துள்ளோம்.

### உலகைக் கவர்ந்த கரும்புலிகள்

இத்தகைய வீரம் செறிந்த, தியாகம் படைத்த விடுதலைப் புலிகளின் பிரிக்க முடியாத அங்கமாக விளங்குவதுதான் கரும்புலிகள். கரும்புலிகள் என்ற சொற்றொடர். இன்று உலகம் முழுவதும் பயபக்தியோடு பேசப்படுகின்ற சொல்லாட்சியாக இது விளங்குகின்றது. தமது உயிரைத் துச்சமென மதித்து, சாவா? வாழ்வா? என்று கரும்புலிகள் நடத்துகின்ற போராட்டத்தைக் கண்டு உலகமே வியப்பில் மூழ்கியுள்ளது.

### கரும்புலிகள் பற்றிப் பிரபாகரன் மொழிந்தவை

ஒரு சமுதாயத்திற்காக ஒரு தனி மனிதன் சாகத் துணிவானாயின் அச்சமுதாயம் வாழும் என்று அண்ணல் காந்தி கூறியுள்ளார். ஈழத் தமிழரைப் பொறுத்தவரையில் எமது விடுதலைப் வேட்கையை நிறைவேற்ற ஒருவர் மட்டும் அல்ல, ஆயிரக்கணக்கில் சாகத் துணிந்துள்ளோம். முன்பு கரும்புலிகளை வர்ணிக்கும்போது தற்கொலைப் படை என வர்ணிப்பதுண்டு. அச்சொல் போதியளவு தக்க பொருளை உணர்த்தாத நிலையில் அது இப்பொழுது தற்கொடைப் படையாக மாற்றப்பட்டுள்ளது. இது தன்கொள்கைக்காக, இனத்திற்காக, நாட்டிற்காக தம்மைக் கொடுக்க முன்வந்தோர் என்ற பொருளை உணர்த்திநிற்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பல்வேறு போர் வடிவங்களில் மிக உயர்ந்ததும், உன்னதமுமான போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதல் ஆகும். தன்னை இழந்து அல்லது எதிரிகள் பலரை அல்லது எதிரிகளின் பலம்மிக்கதோர் இலக்கை அழிக்கக்கூடிய படையணி ஒன்றை அமைக்கும் எண்ணத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தொடக்கத்திலிருந்தே கொண்டிருந் தார். அந்த எண்ணக்கரு செயல் வடிவம் காண படிப்படியாக உயிர்த்தியாகம் செய்யும் வீரர்களை எம் தலைவர் பிரபா உருவாக்கி வந்தார். சிங்களப் படையினர் **Operation liberation** என்ற பெய ரில் படை நடவடிக்கை வாயிலாக வடமராட்சி பகுதியைக் கைப்பற்றியபோது நாம் வெற்றி அடைந்துள்ளோம் எனக் கொக்கரித்தனர்.

### ஜூலை 5 - 1987 இல் கரும்புலித் தாக்குதல்

வடமராட்சியைக் கைப்பற்றியது உளவி



யல் அடிப்படையில் தமக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்ற எண்ணத்தை சிங்களவர் கொண்டிருந்தனர். இத்தகைய உளவியல் வளர்ச்சியை சிங்களப் படை கொண்டிருப்பது எமக்கு ஆபத்து என்று உணர்ந்த தேசியத் தலைவர் ஒரு கரும்புலித் தாக்குதலை நடத்தவேண்டிய தேவை உண்டென்பதை உணர்ந்து அதற்கு செயல் வடிவம் கொடுத்தார்.

1987 ஆம் ஆண்டு ஜூலை 5 இல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி வீரன் புகுந்து அம்முகாமை சுக்குநூறாக்கினான். சிங்கள அரசையும் அதன் படைப்பலத்தையும் கிலி கொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை இனிதே நிறைவேற்றி வைத்தவர் எங்கள் கப்டன் மில்லர். இத்தாக்குதலை அடுத்து இன்றுவரை உலகம் வியக்கும் பல கரும்புலித் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இந்தக் கரும்புலித் தாக்குதலில் இறப்பில் இன்பம் கண்ட வீரர்களினதும் வீராங்கனைகளினதும் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும். தாக்குதல் நடத்தப்போகும் கரும்புலிகள் திரும்பிவரும் எண்ணத்தோடு போவதில்லை. உயிர் நமக்கு வெல்லம் அல்ல உணருவாய் நற்தமிழனே என்று ஓங்கி ஒலித்துக்கொண்டுதான் களம் புகுகின்றார்கள். இப்போரில் வெற்றிக்குப் பின் திரும்புவோர் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. வெற்றியோடு சாவை இறுகணைத்தோரின் எண்ணிக்கையே மிகப் பெரிது.

சாதாரண போராட்டத்தில் வெற்றி பெற்றுத் திரும்பலாம் என்ற நம்பிக்கை சிலருக்கு இருக்கலாம். ஆனால், கரும்புலிகளைப் பொறுத்தவரை தாம் களத்தில் இறப்பது உறுதி என்ற நிலையிற்றான் களம் புகுகின்றார்கள். கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் எடுத்துச் செல்கின்றார்கள். எதிரிகளின் படைப்பலம் பற்றி இவர்கள் அக்கறை கொள்வதில்லை. விளைவைப் பற்றிப் பொருட்படுத்தாது தம் பலத்தையே நம்பி இவர்கள் களத்தில் குதிக்கின்றார்கள். இவர்களின் தாக்குதல் தரைப் படையையும், கப்பற்படையையும் , காவற் படையையும், வான் படையையும் உள்ளடக்கும். இவற்றின் பொருளை நாம் விரிக்கத் தேவையில்லை. பொருள் தொக்கு நிற்கின்றது என்றே நாம் குறிப்பிடலாம்.

1987 ஜூலை 5ஆம் திகதி கரும்புலி (**Black Tigers**) வடமராட்சி நெல்லியடியில் நடத்திய தாக்குதல் ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. சிங்கள ஆட்சியையும், சிங்களப் படையையும் தொடை நடுங்க வைத்தது. இந்திய அரசையும் உலக நாடுகளையும் அதிர்ச்சி கலந்த வியப்பில் ஆழ்த்தியது. சாகத் துணிந்த எம்மை நீ என்ன செய்யப் போகின்றாய் என்று கேள்வி கேட்கின்ற முறையில் இப்போராட்டம் நடந்தது.

நெல்லியடிப் போராட்டத்தில் எமக்கு முன் மாவீரனாகக் காட்சி அளிப்பவர் மில்லர். அவரின் தியாக வரலாற்றினை வரைவதற்கு வரலாற்றில் பல பக்கங்கள் தேவை. மில்லரின் மாவீரத்தை வரலாறு விரும்புகின்ற அளவிற்கு வரையட்டும். ஆனால், கரும்புலி கப்டன் மில்லரைப் பத்து மாதம் கருவில் தாங்கி பரிந்து காத்த அவரின் தாயாரின் கூற்றுக்கள் தான் எமக்கு இன்று தேவை.

### கரும்புலி கப்டன் மில்லர் குறித்து அவரது தாயார் பின்வருமாறு கூறுகிறார்

என்ர மகன் எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்கிறது என்ர நம்பிக்கை. தம்பி, அதனால் நான் அவன்ர போக்குகளைப் பற்றி பெரிசா யோசிக்கிறது இல்லை. அவன் ஒரு துடியாட்டமான பொடியன். ஒரு இடத்தில் ஆறுதலாக இருக்கிறதைக் காணவே ஏலாது. ஏதாவது ஒன்றுசெய்து கொண்டுதான் இருப்பான். மண்ணைக் கிண்டுவான். பற்றரியையும் வயரையும் வைத்து முடிஞ்சு கொண்டு இருப்பான் அல்லது அப்பாவின்ர கார் பெனட்டை திறந்து போட்டு அதற் குள்ள ஏதாவது கழற்றி பூட்டிக்கொண்டு இருப்பான்... அம்மா தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருந்தார்.

மற்ற ஆள்களுக்கு உதவி செய்கின்ற பழக்கம் அவனிட்ட சின்னனிலிருந்தே வந்தது. ஆர் என்ன உதவிகேட்டாலும் உடனே போய் செய்து கொடுப்பான்... முயற்சி, இரக்கமும் அவன் பிறக்கும்போதே அவனோடுகூடப் பிறந்ததுகள் தம்பி. மில்லர் சிறுவனாக இருந்த நாள்களில் அப்பா கார் ஓட்டும்போது அருகில் இருந்து அவதானித்துக் கொண்டு இருப்பவன். அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்ப செய்து பார்க்கத் தொடங்கினான். அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பின்பு மெல்ல உருளத்தொடங்கியது. நாள் செல்லச்செல்ல அகலமான வீட்டு முற்றத்தில் முன்னுக்கும் பின்னுக்கும் போய் வந்தது. ஒருநாள் நான் சமயலறையில் வேலையாக இருந்தபோது கார் வீதியில் ஏறி விக்கி விக்கி ஓடத்தொடங்கியது. என்னைப் பயம் பற்றிக் கொள்ள வீதியிலே ஓடி வந்து பார்த்தேன்.

இப்படித்தான் இன்னும் ஒரு நாள்....

மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் தீர்ந்து போனதால் வீட்டுக்கு முன்னால் நின்று திண்டாடிக் கொண்டிருந்தார்கள். எங்கோ இருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மில்லர் அவர்களிடம் விடயத்தைக் கேட்டறிந்தன். வீட்டுக்குள் வந்தவன் மெதுவாக ஒளித்து ஒளித்து பின்னால் போய், கார் ராங்கிற்குள் குழாயைச் செலுத்தி வாயால் இழுத்து பெற்றோல் எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு ஓர் அசல் அப்பாவியைப் போல எனக்கு முன்னால் வந்து நின்றான். நடந்தைக் கண்டபோதும் நான் அவனிடம் எதுவும் கேட்கவில்லை. எனக்கும் பிழை மாதிரித் தெரியவில்லை.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகவே செய்வான் என்பது நம்பிக்கை.

அதனால், அவனது செய்கையைப் பற்றி அம்மா கவலைப்படுவதில்லை. காலச்சக்கரம் தன்பாட்டில் உருண்டு சென்றது. அப்போது 1984 இன் ஆரம்பம். எங்கள் தேசத்தில் அடிக்கடி வெடியோசை கேட்கத் தொடங்கியது.

எங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை மாறியபொழுது அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. மில்லரின் போக்கும் மாறிவிட்டது. முன்புபோல், பழைய நண்பர்களுடன் மாந்தோப்பில் விளையாடுவது நின்றுபோனது. இப்போது புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் தொடங்கினான். ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து அவசர அவசரமாக ஓடி வந்த தம்பி சொன்னான். அம்மா.. அம்மா... அண்ணா சந்தியடியில் நோட்டீஸ் கொடுத்துக் கொண்டு நிற்கிறான்.

அம்மாவுக்கு உள்ளாரப் பயம் தான். ஆனாலும், அம்மா அவனைப் புரிந்து கொண்டார் அவனின் புதிய நண்பர்கள் அவனைத் தேடி வீட்டிற்கு வருவார்கள். மில்லர் அவர்களோடு புறப்பட்டுப் போவான். இப்படி செல்கிறவன். சில நேரங்களில் ஒரு சில இரவுகள் கழித்தும் வருவான். அம்மா எல்லோருக்கும் சாப்பாடு தருவார். எல்லோரும் சிரித்து கதைத்து சந்தோஷமாக சாப்பிடுவதைப் பார்த்து சந்தோஷப்படுவார். இது வழமையாகிப் போனது.

இப்படித்தான் ஒருநாள் அந்த நண்பர்களோடு புறப்பட்டுப் போனவன் திரும்பிவரவில்லை. பயிற்சி முகாமில் நிற்கிறான் என நண்பன் ஒருவன் வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அவரும் அழுதார். இருந்தாலும் சமாளித்துக்கொண்டார்.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அந்த தாய் இறுதிநாளை நினைத்துப் பார்க்கிறார்.

**மா.க.ஈழவேந்தன்**

அது 'ஒப்பரேசன் லிபரேசன்' காலம் அந்த நேரம் இங்க எல்லா இடத்திலையும் ஆமி. அதனால இரவில நாங்கள் நேரத்தோடையே படுத்திடுவம். அன்றைக்கும் நாங்கள் படுத்திட்டம். திடீரென வீடு எல்லாம் அதிர பெரும் குண்டுச் சத்தம் எங்களை திடுக்கிட்டு எழுப்பிச்சு கொஞ்ச நேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. பிறகு எல்லாம் அமைதியாகிவிட்டது. பொடியள் நெல்லியடி பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்கு என்று எங்களுக்கை கதைச்சுப்போட்டு படுத்திட்டம்.

அடுத்த நாள் காலையில் நெல்லியடி பக்கம் இருந்து வந்த ஒருத்தர் சொல்லி ஊருக்குள்ள அந்தக் கதை மெல்ல மெல்ல என்ர காதுக்குள்ள வந்தபோதுதான் தெரியும்.... முதல் நாள் உலுக்கி என்ர நித்திரையால் திடுக்கிட வைத்த அந்தக் குண்டுச் சத்தம் .... என்ர பிள்ளையையும்... அப்ப அழவும் ஏலாது. எல்லா பக்கத்திலையும் ஆமி... அறைக்குள்ள போய் இருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக்குமுறி அழுதன். றோட்டால ஆமி வாகனங்கள் வாற சத்தம் உறுமிக் கொண்டுக் கேட்கும். மெதுவாக பின் பக்கத்தால் வீட்டை வந்த சனங்கள் கலைந்து போய் விடுவினம்.... பிறகு வருவினம். ம்.. ம்.. என்ர மகன் செத்திட்டான் என்கிறது எனக்கு கவலைதான். ஆனால், அவன் நாட்டுக்காகத்தானே செத்தவன் ... அதை நினைக்கப் பெருமையாகத்தான் இருக்கிறது.

# எதிரியின் நயவஞ்சகத்தை முறியடிக்க தமிழ்மக்கள் அனைவரும் திரளவேண்டும்

## கரும்புலிகள் நிகழ்வில் பொன்.தியாகம் அறைகூவல்

கிளிநொச்சி, ஜூலை4

எம்மீது எதிரிகள் மேற்கொண்டுவரும் நயவஞ்சக தந்திரோபாயங்களை முறியடிக்க தமிழ்மக்கள் அனைவரும் தயாராக வேண்டும்.

-இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற கரும்புலி மாவீரர்களின் நினைவு நிகழ்வில் நினைவுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

எமது விடுதலைப் போராட்டம் நீதியானது; நேர்மையானது என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொள்வதற்கு இந்த மாவீரர்களின் அர்ப்பணிப்பே காரணம்.

கரும்புலிகள் மாவீரர்களுடன் அனைத்து மாவீரர்களும், மக்களையும் வருங்கால சந்ததியினரையும் சுதந்திரமாக மண்ணில் வாழ வைப்பதற்காக தங்களை ஆகுதியாக்கியவர்கள். சுதந்திர வேட்கை என்ற ஓர் இலட்சியத்திற்காக தங்களது இன்னுயிர்களை நீத்தவர்கள்.

இந்த மாவீரர்களினது தியாகம்தான் இன்று தமிழர்களை சர்வதேசத்தின் முன் தலைநிமிர வைத்துள்ளது.

இந்நிலையில் சமாதான நிலை மாற்றப்பட்டு எதிரிகளால் போர் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையிலும் நாங்கள் போரை நகர்த்தவில்லை. இதனை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எதிரியினால் எங்களுக்கெதிராக நகர்த்தப்பட்டுவரும் போரை எதிர்கொள்ள நாங்கள் தயார் நிலையில் உள்ளோம். இந்நிலையில் மக்களும் எதிரியின் நயகவஞ்சக தந்திரோபாயங்களை முறியடிக்கத் தயாராக வேண்டும்- என்றார்.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவை இணைப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொது ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட வருவாய்த்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை வட்போர் முனைத் தளபதிகளில் ஒருவரான வீரமணி ஏற்றிவைத்தார்.


நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே .திருலோகமூர்த்தியும் உரையாற்றினார்.

(த-203)

# ஓராண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் — 03 — 10 — 1942

மறைவு — 04 — 07 — 2004



## அமரர் சண்முகம் சிவப்பிரகாசம்

அன்பின் உறைவிடமே!
ஆருயிர்த் தந்தையே!
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எங்கள் உயிர்த் தெய்வமே அப்பா!
ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லையே எம் இதயம்!
காலங்கள் கடந்தாலும் உம் பிரிவு தந்த
வேதனை எம்மை விட்டு நீங்காது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்

தகவல்: மொனிக்கம்மா (மனைவி)
இல.06, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பெறாமக்கள்,
மைத்துனிமார்.

## நான்கு நூல்களின் அறிமுகவிழா

குருநகர், ஜூலை4

இளவாலையைச் சேர்ந்த கவிஞர் அன்ரன் செல்வக்குமாரினால் எழுதப்பட்ட நான்கு நூல்களின் அறிமுகவிழா எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் வண.பிதா ஜேம்ஸ் நிக்கராயர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, யாழ். பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான சமூகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் உட்பட மற்றும் பலர் விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சிவராசா



கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம், கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவராசா அவர்கள் 30.06.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இலட்சுமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுசிலா தேவி (கிளி)யின் அன்புத் தந்தையும் தங்கராசாவின் (தபால் அஞ்சலகம், காங்கேசன்துறை) அன்பு மாமனாரும் நாகரத்தினம், புவனேஸ்வரி, சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் குருநாதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரகு (லண்டன்), கிருபா, பாமினி, ரூபினி, தவநேசன், தயாநிதி, நிரஞ்சினி ஆகியோரின் பெரிய தந்தையும் கங்காதரன், கௌரி (ஜேர்மனி), ரஞ்சித் (லண்டன்), சுயதா, சுகிதா, லோகநாயகி, கௌரிபாலன் (ஜேர்மனி), குகவதனா (லண்டன்), தேவி, விஜயகுமார் (டோகா) ஆகியோரின் ஆசை மாமனாரும் தவமணியின் ஒன்றுவிட்ட சகோதரனும் நித்தியா (யாழ்/இராமநாதன் கல்லூரி), பகிதரன், கௌதமன், விதுசா, கௌசிகா, கோபி, திலக்சன், துசான், ஆர்த்தி, ஆகாஸ் (லண்டன்), நிலான்சி, பிரவிந்து ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-07-2005) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.*

தகவல்:
*நாகரத்தினம், சத்தியசீலன்*
(மைத்துனர்கள்).

(37290) (24-16)

## திருமதி இசபெல் கிருபாமணி அஸ்பரி

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இசபெல் கிருபாமணி அஸ்பரி அவர்கள் 02-07-2005 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் றெபேட் கிருபநாயகம் அஸ்பரியின் அன்பு மனைவியும் விமலேந்திரன் (விமலன்), ராஜேந்திரன் (ராஜன்), காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் பாலேந்திரன் (பாலு), I.V.இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயும் லின்டா, இன்பம், றீட்டா, ராஜினி, சோமசேகரம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04-07-2005) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக அராலி தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேர்ச் ஒழுங்கை,*
*அராலி வடக்கு.*

(37294) (24-16)

தகவல்:
*பாலு அஸ்பரி* (மகன்).


nilavu.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com
a member of Dream Solutions (Pvt) Ltd

யாழ் மக்களே! உங்களுக்காக உங்கள் குழந்தைகளுக்காக

# எமது சேவையும் சேவைப்பரப்பும் விஸ்தரிக்கப்படுகிறது

## GIT-GUIDE

GIT பொதுப் பரீட்சை Aug-21

நீங்கள் தயாரா?

இலங்கையில் வெளியிடப்பட்ட ஒரேயொரு GIT முழுமையான கையேடுத் தொகுதி

- **11 முழுமையான வழிகாட்டி புத்தகங்கள்**
  Fundamentals of IT,
  Windows Basics,
  Mathematics for Computing,
  Information System & IT,
  Computer Programming,
  MS Word,
  MS Excel,
  MS Access,
  MS PowerPoint,
  Internet & e-m@il,
  IT & National Development
- **3 மாதிரி வினாத்தாள்கள்**
- **கற்றலுக்கான குறுவட்டுCD**
- MS Office Shortcut Keys

## பல்லூடக குறுவட்டுக்கள்

கணினி பாடநெறிகளை கற்க ஆர்வமுள்ள உங்களுக்காக, உங்களுக்கு ஏற்ற நேரத்தில் உங்கள் வீட்டிலிருந்தவாறே கணினி பயிற்சி பெற - செய்முறை விளக்கத்துடன் கீழ்வரும் பாடநெறிகளுக்கு சுயகற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்களை எமது நிறுவனம் வெளியிட்டுள்ளது.

**D.T.P.**
Adobe PageMaker
Photoshop
Corel Draw
Photo Draw
Advance Photoshop

**Ms-Office**
Windows Basics
Word
Excel
PowerPoint
Access
Internet & Email

**e-Books**
Java
SQL
TCP/IP

**Programming**
Visual Basic
Java
Oracle with SQL

**Multimedia**
Flash
Maya
3D StudioMax

**Web Design**
Internet & Email
HTML
Front Page
Dream Weaver
Flash

சிறுவர்களுக்கான கதைகளும் பாடல்களும்

Training Division

## பாடநெறிகள்

**Diploma in Ms-Office**
Duration : 3 Months
**Diploma in DTP**
Duration : 4 Months
**Diploma in H/W & Networking**
Duration : 3 Months
**Diploma in WebDesign**
Duration: 3 Months
**Diploma in WebProgramming**
Duration : 3 Months
**Diploma in ProgrammingConcept**
Duration: 3 Months
**Diploma in S/W Development**
Duration: 6 Months
**Diploma in MultiMedia**
Duration : 6 Months

இப் பாடநெறிகளுக்கு கட்டணக்கழிவோ புலமைப்பரிசிலோ வழங்கப்படமாட்டாது.



**100% கட்டணம் செலுத்தப்பட வேண்டியது**

275, Jaffna Road, Manipay. Phone : 0777 740 413. (மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)
138, Navalar Road, Jaffna. Phone : 0714 801 391.(மனோகரா திரையரங்குக்கு அருகில்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 19 11 1945 — விண்ணில் 04 06 2005



## அமரர் சின்னத்துரை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற பணியாளர் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

அமரர் அவர்களின் மரணச்செய்தி கேட்டுவந்து ஆறுதல் கூறியோருக்கும் கடிதம், தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (04.07.2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(37288) (54-11-16)

பாற்சங்க ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

---

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 692 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 01-7-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5520292-5535960 | |

லக்கினம் மகரம்

வெற்றி இலக்கங்கள்

**01 05 08 42**

ஜக்பொட் பரிசு ரூபா.17,81,150/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 25,57,200/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 347,199 | 10/- | 34,71,990/- |
| 2.இலக்கங்கள் | 31,939 | 20/- | 6,38,780/- |
| 1.இல லக்கினம் | 31,888 | 30/- | 9,56,640/- |
| 2.இல லக்கினம் | 2,853 | 100/- | 2,85,300/- |
| 3.இலக்கங்கள் | 849 | 500/- | 4,24,500/- |
| 3.இல லக்கினம் | 79 | 5,000/- | 3,95,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 17,81,150/- | - |
| மொத்தம் | 4,14,816 | - | 76,24,460/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,24,460/- தொடர் இல. 4576737 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5520486-3-50
5530358-6-24
5534005-4-06
5522039-7-77
5532537-0-75

---

# 02.07.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிதா வாசனாவ — சனிக்கிழமை அதிர்ஷ்டம் — உதயசூரியன் போன்று உன்னத நம்பிக்கை

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300382241 இலிருந்து 300399768 வரை

சீட்டிழுப்பு இல. 1620

**01 07 15 34** சுப்பர் எண் **13**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.44,80,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 44,80,600/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 30 | 5,000/- | 1,50,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 467 | 1,000/- | 4,67,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,509 | 500/- | 7,54,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,589 | 40/- | 9,03,560/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,362 | 20/- | 4,27,240/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,20,998 | 10/- | 32,09,980/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 74,12,280/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 53,38,150/-

தொடர் இல. 200418705 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 06 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், கைதயல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு பொதியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

300392380-3-68
300393348-6-06
300388066-7-68
300386848-3-84
300388282-1-32

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

---

# SUBRA (14) சித்தன்கேணி

SPOKEN ENGLISH AND GRAMMAR
By: **BRITTO**

ஆரம்பம்:- 05.07.2005 செவ்வாய் காலை 7 மணி.
(செவ்.-வியா. காலை 7.00)

## பேச்சுச் சிங்களம்

By: லீலாக்கிருஷ்ணன்

ஆரம்பம்:- செவ்வாய் காலை 8 மணி (செவ்.- வியா. காலை 8.00)

★ அனுமதிக்கு முந்துங்கள் ★

(C/43852) (12-17-33) (29/24/16)

---

# அந்தியேட்டி அழைப்பு



## அமரர் ஸ்ரீரங்கநாதன் பார்வதிப்பிள்ளை

மலர்வு 01.07.1939 — உதிர்வு 04.05.2005

எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.07.2005) திங்கட்கிழமை முற்பகல் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி. (37301) (12-17-33) குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னம்பலம் தங்கமுத்து

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் தங்கமுத்து அவர்கள் நேற்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சீதாப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் சரஸ்வதி, காலஞ்சென்ற நாகம்மா மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை, சின்னத்தம்பி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 12.30 மணியளவில் காரைநகர் நீலகிரி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர்.

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(37309) (12-17-33)

## அரியகுட்டி ஜேக்கப் செல்வரத்தினம்



முதலாம் குறுக்குத் தெரு, இணுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட அரியகுட்டி ஜேக்கப் செல்வரத்தினம் 02.07.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.07.2005) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் தென்னிந்திய திருச்சபை கல்லறை வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்.

(37302) (12-17-33)

---

# ராஜா யாழ்ப்பாணம்

04.07.2005 இன்று எமது திரையரங்கின் 44ஆவது ஆண்டு ஆரம்பதினம் என்பதை ரசிகப்பெருமக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த

## சந்திரமுகி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

அடுத்தவெளியீடு: பெப்ரவரி 14

---

# நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சுனாமி போன்ற பல இயற்கைப் பேரழிவுகளை சித்திரிக்கும்

## DAY AFTER TOMORROW

(நாளை மறுநாள்) (ரீல்ஸ்) (தமிழ்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே).

---

# நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

அஜீத், தேவயானி, மணிவண்ணன் நடித்த

## காதல் கோட்டை (ரீல்ஸ்) (இன்று மட்டும்)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

05.07.2005முதல் 6.2 அங்குலம்

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் யோசவ் மரியதாசன்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

அன்னை மடியில் 22.03.1931
அமலன் அடியில் 04.07.2004

ஆண்டு ஒன்று ஓடி மறைந்து விட்டதையா
ஆனாலும் உம் நினைவுகளோ நிழல்களாகி
எம்மைத் தொடருதையா
இயலாத பொழுதுகண்டு இமைமூடும் வரையிலிலும்
இனிதாக உறவுகாத்த எம் இனிய ஐயா
ஈடில்லா உம் சேவை இனி எமக்கில்லை ஐயா
ஈந்திட்ட உம் அன்பு இனியெங்கு கிடைக்கும் ஐயா!
உம் உருவைக் காணத் தவிக்கின்றோம்
உம்மோடு பேசத் துடிக்கின்றோம்
ஓடோடி வாருமையா
ஓய்ந்திடாது உமது அன்பு
– கிடைக்க வரம் தாருமையா

(C/43858) (12-17-33)

தென்மூலை,
அச்சுவேலி.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, சகோதரி, பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள்.

---

# ௩௰ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் கிருஷ்ணமூர்த்தி குணசீலன் (குணம்)

மலர்வு 30.05.1979 — உதிர்வு 06.04.2005

எமதன்புக் குணத்தினை காலனவன்
அகாலத்தில் அழைத்தவேளை – நாம்
கலங்கி நின்றபோது எமை
அரவணைத்து, ஆறுதலளித்து, அனைத்து
வழிகளிலும் ஒத்துழைத்த அன்பு
உள்ளங்களுக்கு எமது நெஞ்சம்
நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (04.07.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல.114, சில்வா வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

(C/43859) (12-17-33) குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்கள்

## தொம்மைப்பிள்ளை சூசைப்பிள்ளை



சென்.ஜேம்ஸ் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரான தொம்மைப்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் 02.07.2005 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மேரிராணி (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும் வசந்தி, யனசி, ஜெயா, சாந்தி, றுயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் குணம், ஜெயநாதன், அமலதாஸ், விமலன், ஜோகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு.

தகவல்:
அமலதாஸ் (மருமகன்).

(37307) (12-17-33)

## திருமதி தவேந்திரராசா விமலாதேவி



சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியைச் சேர்ந்த திருமதி தவேந்திரராசா விமலாதேவி 02.07.2005இல் காலமானார்.

அன்னார் சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர் பொ.சின்னராசா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் கி.தவேந்திரராசாவின் பாசமிகு மனைவியும் ஜெயந்தன், ஜெனிதா, ரிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜியரத்தினம், மகேந்திரம், ஜெயரட்ணம், விஜியராணி, விஜயா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பெருங்குளம் சந்தி,
சாவகச்சேரி.

தகவல்:
பொ.சின்னராசா (தகப்பன்),
சி.தவேந்திரராசா (கணவன்-தவம்).

(C/43872) (12-17-33)

## சங்கரப்பிள்ளை சிவபாலசுப்பிரமணியம் (பெரியதம்பி)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவபாலசுப்பிரமணியம் நேற்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் சந்திரலேகாவின் (பலாலி) அன்புக் கணவரும் வசீகரன், சிவந்தினி, சுதாகரன், சுஜாத்தா, சுபாசினி, லக்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் றேகாதேவி, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் சரண்யாவின் அன்புப் பேரனும் சௌந்தரநாயகி (டென்மார்க்), வரதராஜப் பெருமாள், பூரணலிங்கம், சோதிமலர், பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுப்பிரமணியம் (டென்மார்க்), விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல்:
பூரணலிங்கம் (சகோதரன்).

(37298) (12-17-33)

# ஜனாதிபதி வேட்பாளரைத் தேர்வுசெய்ய சு.க. மத்திய குழு வியாழனன்று கூடுகிறது

ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடத் தில் நடத்துமாறுகோரி ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் பேரணிகளை நடத்த ஆரம்பித்திருக்கும் அதேசமயம், ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இவ்வாரம் அவசரமாகக் கூடுகிறது.

ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின்பேரில் இது தொடர்பான அறிவித்தலை கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஏழாம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் மத்திய குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அன்றைய கூட்டத்தில் ஆராயப் படவிருப்பதாக அரசின் சிரேஷ்ட அமைச்சரொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், அமைச்சர் அனுர பண்டார நாயக்கவும் களமிறங்கவுள்ள சூழ்நிலையில், இது குறித்தான தீர்மானம் எடுப்பதாயின், மத்திய குழுவில் இரகசிய வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டிவருமென்றும் அந்த அமைச்சர் மேலும் கூறினார்.

## கரும்புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுப்பாட்டுப் பகுதிகள் ஊடாக செல்லவிருப்பது பற்றி விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முன்னரே அறிவித்திருந்தனர். எனினும் நேற்றுக் காலை அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதனால் ஊர்திப் பவனியின் பாதையில் மாற்றம் செய்யப்பட்டது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்கான அனுமதி பிற்பகலில் வழங்கப்பட்டது. இதனையடுத்து ஊர்திப் பவனி இன்று மட்டக்களப்பு நகருக்குள் செல்லும்.

புலிக்கொடியை நகருக்குள் எடுத்துச்செல்வதற்கு இராணுவத் தரப்பு ஆட்சேபம் தெரிவித்ததால் புலிகள் அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (க)

## புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ, நாளைய தினம் சபையில் இந்த யோசனைகளை பிரதமர் சமர்ப்பிப்பாரென்று தமது கட்சி எதிர்பார்க்கின்றது என்று கூறினார்.

"பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தின் கைச்சாத்திட்ட ஆவணத்தைச் சபையில் சமர்ப்பிக்குமாறு நாம் பிரதமரைக் கோரியிருக்கிறோம். இதுகுறித்தான அவரின் நிலைப்பாட்டையும் அறிவிக்குமாறு வேண்டியிருக்கிறோம். பிரதமர் இதற்கான நடவடிக்கையை எடுப்பாரென நம்புகின்றோம்'' என்றார் விமல் வீரவன்ஸ.

இதற்கிடையில் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடப்பட்ட பிரதி நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் ஜே.வி.பி. சபைக்குள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## அரச நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் முக்கியமான பல விடயங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இன்றைய கூட்டத்தின்போது விவாதிக்கப்படவுள்ளது.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு உத்தேசம் கொண்டிருக்கவில்லையென்றும், ஆனாலும், யாராவது இதனைச் சமர்ப்பிக்குமாறு கோரினால் நாடாளுமன்றத்தில் அதனை அரசு சமர்ப்பிக்குமென்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சரொருவர் கூறினார்.

## தமிழ்த் தேசியப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமரபாகு, நவிண்டில் ஆகிய இடங்கள் ஊடாகச் சென்று நாளை மாவீரர் மில்லர் தற்கொடைத் தாக்குதல் நடத்திய இடமான நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை அடையும். அங்கு எழுச்சிக்கூட்டம் நடைபெறும்.

எழுச்சிக் கூட்டங்கள் மாலை 6.30 மணிக்கு குறிப்பிட்ட இடங்களில் நாளை இடம்பெறவுள்ளன. இவற்றில் சிறப்புரைகள், கலை நிகழ்வுகள் நடைபெறும்.

கரும்புலிகள் தினத்தையொட்டி தமிழர் தாயகப் பிரதேசங்களில் நினைவுப் பந்தல்களும் வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. சிரமதானம் போன்ற பொதுச்சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நாளை கோட்ட ரீதியாக இடம்பெறவுள்ள கரும்புலிகள் தின நிகழ்வுகளில் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தில் உன்னத போராயுதங்களான கரும்புலிகளை நினைவுகூரவேண்டுமென்று யாழ்.மாவட்ட தேசிய எழுச் சிப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

(ஓ-17-70-173-204)



தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப்.கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக மோட்டார் சைக்கிள் படைப் பிரிவினரின் மூன்றாவது அணி பயிற்சியை நிறைவு செய்துள்ளது. இதற்கான நிகழ்வில் போராளி ஒருவர் நடத்திக்காட்டிய சாகசம் இது.

# சிறுபான்மையினரின் அபிலாஷைகளை மதிக்காததால் ஹெல உறுமயவுடன் கூட்டுச் சேராதாம் ஜே.வி.பி.!

ஜே.வி.பியினருக்கும் ஜாதிக ஹெல உறுமயவினருக்கும் இடையிலான தொடர்புகள் முறிந்துவிட்டன. இனிமேல் அவர்களுடன் கூட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

ஜாதிக ஹெல உறுமய ஒரு ஜனநாயகவாதக் கட்சி அல்ல என்றும், சிறுபான்மையினரின் அபிலாஷைகளை மதிக்காத கட்சி என்றும் சாடுகின்றார் சோமவன்ஸ. அதேவேளை, முஸ்லிம் கட்சிகள் சிலவற்றுடன் இணைந்து புதிய கூட்டமைப்பு ஒன்றைத் தாங்கள் உருவாக்கப் போகின்றார்கள் எனவும் கூறுகின்றார் அவர்.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அரசுக்கு எதிராக ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் அவ்வப்போது சேர்ந்து ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தின.

ஆனால், அரசுக்கு எதிரான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் இரு கட்சிகளுக்கும் இடையில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அரசிலிருந்து ஜே.வி.பி. விலகியபின் இதுவரை ஐந்து முஸ்லிம் அரசியல் அமைப்புகளுடன் அது உத்தியோகபூர்வமான பேச்சுகளை நடத்தியுள்ளது. அதேநேரம், சிங்கள அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பலருடனும அது பேச்சுகளை நடத்தியுள்ளது.

பொதுக்கட்டமைப்புக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துவரும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி என்பவற்றின் ஆதரவையும் பெற்று அரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிராக உறுதியான ஒரு கூட்டமைப்பை உருவாக்கப்போவதாகவும் ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், இக்கூட்டமைப்புத் தொடர்பாக மேற்குறிப்பிட்ட இரு கட்சிகளும் எதனையும் கூறமறுத்துவிட்டன.

பொதுக்கட்டமைப்பை 72 சதவீதமான சிங்கள - முஸ்லிம் மக்கள் எதிர்க்கின்றனர். ஆனால், அவர்கள் ஒரே அரசியல் கட்சியில் இல்லை. ஸ்ரீ.ல.சு.கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உட்படப் பல பிரதான அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

தேசிய நலன்களில் அக்கறையுடைய - அதேவேளை, மாறுபட்ட கொள்கை யுடைய - அரசியல் கட்சிகளில் இருப்ப வர்களை எல்லாம் உள்ளடக்கியதாகவே புதிய கூட்டமைப்பு அமையும் என ஜே.வி.பி. வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.(க)

## மீளக்குடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் இருந்தும் பிரதிநிதிகளும் ஜமீயத் உலமா சபை உறுப்பினர்களும் நடாளுமன்ற உறுப்பினர்கள் கி.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோருடன் யாழ். மாவட்ட அரசியல் துறை சார்பில் இரு பிரதிநிதிகளுமாக மொத்தம் 27 பேர் இடம்பெறுவர். (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவபாலன் (C.K.)

*(முகாமையாளர் - இலங்கை வங்கி, காங்கேசன்துறை)*



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாக வும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாலன் அவர்கள் நேற்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை அதி காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சந்திரவதனியின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அன்னப்பிள்ளையின் மருமகனும் ஜதீஸ்வரியின் அன்புக் கணவரும் சிவஜா, நிருஜா, அனுஜா, சிவஜயன், சிவகஜன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*'பிருந்தாபதி'*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

தகவல்:
சி.ஜதீஸ்வரி (மனைவி), பிள்ளைகள் மற்றும் மருமகன், கு.சிவநாயகி (சகோதரி).

(37312) (12-17-33)

## வைத்தியலிங்கம் குலசேகரம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் குலசேகரம் அவர்கள் நேற்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தபுரத்தில் கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்கந்தபுரம்,*
*அக்கராயன்.*

தகவல்:
வை.பேரம்பலம் (ஆசிரியர் - சகோதரன்).

(37314) (12-17-33)

## கனகசபை ஈஸ்வரக்குருக்கள்

கல்வயலைப் பிறப்பிடமாகவும் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை ஈஸ்வரக் குருக்கள் அவர்கள் நேற்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.07.2005) மாலை 6.30 மணியளவில் பிறவுண் வீதியிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*இல.239, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ஈ.விக்கினேஸ்வரக் குருக்கள் (மகன்).

(37315) (12-17-33)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கருணாநிதி சியாமளா



யாழ். வேளாதோப்பு கல்வியங்காட்டை நிரந்தர வதிவிடமாகவும் வவுனியா உக்குளான் குளத்தைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி கருணாநிதி சியாமளா அவர்கள் 2.7.2005 சனிக்கிழமை காலமா னார்.

அன்னார் கருணாநிதி அவர்களின் அன்பு மனைவியும் அபிசித், டிப்சித், சந்தோசலா ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் - இராரமணி தம்பதிகளின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2005) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேளாதோப்பு,*
*கல்வியங்காடு.*

தகவல்:
குடும்பத்தினர்.

(37313) (12-17-33)

## விஜயரத்தினம் ரவிச்சந்திரன்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்பபாணத்தை வசிப்பிடமாகவும் கொணட விஜயரத்தினம் ரவிச்சந்திரன் அவர்கள் 01.07.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரத்தினம் - மகேஸ்வரியின் அன்பு மகனும் குமுதினியின் அன்புக் கணவரும் நிசாந்தின் பாச மிகு தந்தையும் நித்தியானந்தன், கலா நிதி, ஸ்ரீரங்கன் (ஜேர்மனி), ஜெயானந்தன் (வவுனியா), கருணாணந்தன் (சுவிஸ்), விஜியேந்திரியின் (வவுனியா), அன்புச் சகோதரனும் தனலக்ஸ்மி, மகாதேவன், சுகந்தினி (ஜேர்மனி), சிவாஜினி, விக்னேஸ்வரி (சுவிஸ்), தர்மராஜா (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ரதீபன், றஜீவன், யசோநிதி, மதுரா, சுலக்ஸனன் ஆகியோரின் பாசமிகு மாம னாரும் மயூரன், மயூரி, பகீரதன், சகாயன், கிருஸ்ணன் ஆகியோரின் சிறியதந்தையும் கிலோஜன், தரண்யா, அஜந் தன், ஹரினி, அர்ஜுன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12,தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
தாய், சகோதரர்கள்.

(37310) (12-17-33)


NEW SCIENCE CENTRE
யாழ். நகர்
DAY CLASS
CHEMISTRY
⇨ துரித மீட்டல்
⇨ அலகு ரீதியான வினாவிடை
⇨ அலகு ரீதியான மாதிரி வினாக்கள்
⇨ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
⇨ 5 MODEL EXAM
⇨ 20இற்கும் மேற்பட்ட கருத்தரங்கு
அன்பழகன் B.Sc (C-43874)

மெகா
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
10-07-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
• யாழ்ப்பாணம் • சுன்னாகம் • சாவகச்சேரி
• நெல்லியடி • கிளிநொச்சி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சமையல் எரிவாயுப் பாவனையை குறைக்க உதவும் சேமிப்புக் கருவி

## 'ஜெனரல் ரேடர்ஸ்' அறிமுகப்படுத்தும் GSK உபகரணம்

சமையல் எரிவாயுவை 50 வீதம் முதல் 55 வீதம் முதல் குறைத்துப் பாவிக்கும் ஆற்றல் மிக்க GSK காஸ் சேமிப்புக் கருவியை 'ஜெனரல் ரேடர்ஸ்' இலங்கையில் முதல் முறையாக அறிமுகப்படுத்துகிறது.

GSK எரிவாயு சேமிப்பு கருவி எரிபொருள், பணம், சக்தி, காலம் என்பனவற்றை மீதப் படுத்தி, நுகர்வோருக்கு பல அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கிறது.

இச்செயல் திறனுக்கு பல்வேறு ஆய்வு கூடங்களில் நடத்தப்பட்ட பல்வேறு சோதனைகள் சான்றுபகருகின்றன.

இன்றைய காலகட்டத்தில் துரிதமாக அதிகரித்து செல்லும் எரிவாயு விலையைச் சமாளிப்பதற்கு GSK எரிவாயு சேமிப்புக் கருவி பெரிதும் உதவுகின்றது.

ஒவ்வொரு சமையல் எரிவாயு சிலிண்டரிலிருந்தும் மாதம்தோறும் 50 வீதம் தொடக்கம் 55 வீதம் வரையிலான எரிவாயுவை இக்கருவி மிச்சப்படுத்துகின்றது. அதனூடாக பெரும் தொகையான பணத்தை மீதப்படுத்த முடியுமென்பது உறுதி.

இந்த GSK எரிவாயு சேமிப்புக் கருவியைப் பயன்படுத்தும்போது சமையல் எரிவாயு சிலிண்டரிலிருந்து அடுப்புக்கு எரிவாயு செல்கையில் அதில் ஏற்படும் விரயம் தடுக்கப்படுகிறது. காபன் துகள்களை உறிஞ்சி பூரண தகனத்திற்கு அது வழிவகுப்பதனால் அதிக வெப்ப சக்தி பெறப்படுகிறது. இதனூடாக சமையல் நேரத்தை விரைவுபடுத்திக் கொள்ள வாய்ப்புக் கிட்டுகிறது.


இந்த GSK எரிவாயுக் கருவிக்கு விசேடமான பராமரிப்பு எதுவும் தேவையில்லை. அத்துடன் கருவியைக் கையாள்வதும் மிகச் சுலபம். குசினியில் படிகின்ற காபன் துகள்கள், பிற தகனக் கழிவுகளையும் கணிசமானளவு குறைப்பதற்கும் இக்கருவி பங்களிப்புச் செய்வதனால் பராமரிப்பு இலகுவாகின்றது என்பது நிரூபணமாகியுள்ளது.

மேலும் சுற்றுச்சூழலையும் சுத்தமாக வைத்திருக்கவும் இக்கருவி துணைபுரிவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### GSK கருவியின் இயக்கம்

எரிவாயு மூலக் கூறுகள், மின்சக்தி ஊசலாடும் தொகுதியையும், தொடர்ச்சியாகப் பெருக்கெடுக்கும் பகுதியையும் ஊடுருவும்போது உண்டாகும் சுழற்சி மின்காந்தத்தைப் பெருக்கி, மூலக்கூற்று அணுப்பிரமாண அளவிற்கு ஆக்கி வருகிறது.

இவ்வாறு பெருக்கும் பகுதியின் காரணமாக மின்சக்தி அதன் அதியுயர் சுழற்சித் தன்மையைத் தக்கவைத்துக் கொள்கிறது. இது மேலதிகபிராண வாயுவை இழுத்தெடுப்பதற்கு எரிவாயு மூலக் கூற்றுக்கு உதவுகிறது.




### GSK கருவியை கையாளும் முறை

GSK எரிவாயுக் கருவியை முதலில் பாவனைக்கு உட்படுத்தமுன்னர் 15 நிமிடங்களுக்கு 'சார்ஜ்' செய்தல் அவசியம். இதற்காக கருவியின் ஆளியை திறந்தால் போதும்.

அதேவேளை, இச் 'சார்ஜ்' செய்யும் நடைமுறையை 15 நாட்களுக்கு ஒருமுறை 15 நிமிடங்கள் என செய்து வருதல் கட்டாயமானதாகும். இச்செயற்பாட்டினாலேயே கருவி இயங்குகின்றது. இதுவே கருவி இயங்குவதற்கான சக்தியை வழங்குகின்றது.

GSK எரிவாயு சேமிப்புக் கருவியை சமையல் எரிவாயு சிலிண்டரிலிருந்து அடுப்புக்குச் செல்லும் குழாயில் - அடுப்பை அண்மித்த வகையில் - அதாவது அரை அடி தூரத்தில் - பொருத்துதல் வேண்டும். இதன்போது கருவியின் 'In' எனப் பொறிக்கப்பட்ட பகுதியில் காஸ் சிலிண்டரிலிருந்து வரும் குழாயும், 'Out' எனும் பகுதியில் அடுப்பிலிருந்து வரும் குழாயும் அமையும் வண்ணம் பொருத்தப்படவேண்டும்.

அத்துடன் GSK எரிவாயுக் கருவியை கையாள்வது எவ்வாறு, என்பது பற்றிய விபரங்கள், கருவி அடங்கியுள்ள அட்டைப் பெட்டியில் செய்முறைப்பட விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிகமான ஏதாவது தகவல்கள் தேவைப்படின் அல்லது பெறவிரும்பினால் அல்லது எரிவாயுக் கருவியின் செயற்பாட்டை நேரில் கண்டறிய ஆர்வமிருந்தாலும், உங்களுக்கான சேவையை மனப்பூர்வமாக வழங்க 'ஜெனரல் ரேடர்ஸ்' தயாராகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

GSK எரிவாயு சேமிப்புக் கருவி ISO 9001 - 2000 அங்கீகாரத் தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது. இதன்மூலம் பாவனையாளர்கள் மேற்படி கருவியின் செயற்றிறனை இலகுவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

அதேசமயம், இக்கருவி தீப்பற்ற முடியாத வகையில் (fully fire Proof) தயாரிக்கப்பட்டிருப்பதை 'மும்பாய் தீயணைப்புப் படை' அங்கீகரித்து உறுதிப்படுத்தியிருக்கின்றது. இது அதன் நீண்டகால பாவனைக்கு உத்தரவாதமளிப்பதாகவும் உள்ளது.

### GSK கருவிக்கான உத்தரவாதம்

GSK எரிவாயு சேமிப்புக் கருவிக்கான உத்தரவாதம் 2 வருடங்களாகும். இக்கருவியின் LPG, CMG, PNG (Pipe Maturar Gas) ஆகிய காஸ் வகைகளுக்கும் பாவிக்கமுடியும்.

### விநியோகமுறை

சமையல் எரிவாயு பாவனையின் அளவை கணிசமானளவு குறைத்து, இல்லத்தரசிகளினதும், சமையல் எரிவாயு பாவனையாளர்களினதும் நன்மதிப்பை மிகவும் குறுகிய காலத்தில் வென்றெடுத்த GSK எரிவாயு சேமிப்புக் கருவி, நாடளாவிய ரீதியில் விநியோகிக்க ஆர்வமுள்ள விநியோகிஸ்தர்கள், விற்பனை முகவர்கள் 'ஜெனரல் ரேடர்ஸ்' நிறுவத்துடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தொடர்புகளினை ஏற்படுத்த விரும்புவோர், 'ஜெனரல் ரேடர்ஸ்' இல. 59/8, புதிய சோனகத் தெரு, கொழும்பு - 12 என்ற முகவரியிலோ அல்லது 2543814, 5366211, 5333417 மற்றும் 0777-769506, 071-7412618 என்ற தொலைபேசி இலக்கங்களுடனும், 2673103 என்ற தொலைநகல் இலக்கம் மூலமாகவும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற 'ஜெனரல் ரேடர்ஸ்' நிறுவனம், GSK எரிவாயு சேமிப்புக் கருவியின் ஏக இறக்குமதியாளர்களாக திகழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமிரேட்ஸ் வழங்கும் கோடை விசேடம்



மொரிஷியஸின் வனப்புமிக காட்சி.

கொழும்பில் இருந்து எமிரேட்ஸ் விமானத்தில் மூன்று பொழுதுபோக்கு இடங்களுக்குப் பயணமாவோர் கோடை விசேட நன்மைகளைப் பெறுவர் என அவ்விமான சேவை அறிவித்துள்ளது.

மொரிஷியஸ், செசல்லஸ், கேப்டவுண் போன்ற இடங்களில் உள்ள சிலஹோட்டல்களில் தங்குவோருக்கே இந்தக் கோடை விசேடம் வழங்கப்படவுள்ளது.

இந்த ஹோட்டல்களில் தங்கும் மேலதிக நாட்களுக்கு கட்டணம் செலுத்தத் தேவையில்லை என எமிரேட்ஸ் தெரிவித்துள்ளது. மொரிஷியஸில் உள்ள ஹோட்டல்களில் ஐந்து இரவுகள் தங்கும் வருகையாளர்கள் நான்கு இரவுகளுக்கு மாத்திரமே கட்டணம் செலுத்த வேண்டும். மீதி எமிரேட்ஸ் வழங்கும் கோடை விசேட உதவியாக அமையும்.

இதுதொடர்பில் எமிரேட்ஸ் விற்பனை கொழும்பு முகாமையாளர் தேவிகா எல்லேபொல தெரிவிக்கையில் -

எமிரேட்ஸ் விடுமுறை கோடை விசேடம், வசீகர இடங்களில் விடுமுறையைக் கழிக்க எதிர்பார்த்திருக்கும் இலங்கையர்களின் கண்களைத் திறந்து வைக்கும். இந்த விசேடம், அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் அவர்களைச் சந்தோஷப்படுத்தும். புதிய இடங்கள் பற்றி யோசிப்பதற்கும் புதிய அனுபவங்களைப் பெறவும் இந்தப் பொதி ஆர்வப்படுத்தும். - எனக் குறிப்பிட்டார்.

அத்தோடு, கொழும்பில் உள்ள எமிரேட்ஸ், லெபனானின் தலைநகர் பெய்ரூட், துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல் ஆகிய எழில்மிகு நகரங்களுக்கும் இலங்கையர்களை அழைத்துச் செல்ல ஆர்வம் கொண்டுள்ளதாக எமிரேட்ஸ் அறிவித்துள்ளது.

எமிரேட்ஸின் இந்தக் கோடை விசேடம் இம்மாதம் ஜூனில் இருந்து செம்டெம்பர் இறுதி வரையாகும் எனவும் இவ்விமான சேவை மேலும் தெரிவித்துள்ளது.

சுப்பிரிவிக்கி
மூலிகை
ஆயுர்வேத
பற்பசை




சுமுது
வாயில் உண்டாகும்
தொற்று நோய்களை
கட்டுப்படுத்தும்.




ஆயுர்வேத மூலிகை எண்ணெய் அடங்கிய பற்பசை



சித்தாலேப
குடும்பத்தின் தயாரிப்பு

வடபுல விநியோகஸ்தர்கள் :-
வனிக்கா மெடிகல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 2226291, பக்ஸ் :- 021 2222445.

மக்களை ஒன்றிணைத்தல். குடும்பங்களை ஒன்று சேர்த்தல். தேசத்தை வளப்படுத்தல். எமது விருத்தியில் பங்கேற்க உங்களை அழைக்கின்றோம்.



# பங்கு வழங்கல் விரைவில் ஆரம்பமாகின்றது

டயலொக் டெலிகொம் பங்கு வழங்கல் 2005 ஜுலை 7ம் திகதி ஆரம்பமாகின்றது.
டயலொக் டெலிகொம் பங்கு வழங்கலுக்கான விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு விபரக்கோவையை பார்வையிடவும். ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி கிளைகள், பங்குத் தரகர்கள், SSP கோபரேட் சேர்விஸஸ் பிரைவேட் லிமிட்டட்டின் டயலொக் பங்கு வழங்கலுக்கான பதிவாளர்கள், NDB முதலீட்டு வங்கியின் பங்கு வழங்கலின் முகாமையாளர்கள் அல்லது www.DialogTelekom.com என்ற எமது இணையத்தளம் போன்றவற்றிலிருந்து விபரக்கோவை மற்றும் விண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும். ஹொட் லைன்: 077-2005-07-7

ஒவ்வொன்றும் 1.00 ரூபா பெயரளவு பெறுமதி கொண்ட 712,336,293 மில்லியன் பங்குகள் ஒவ்வொன்றும் 8.00 ரூபா முதல் 12.00 ரூபா வரையான பெறுமதிக்குள் வழங்கப்படும்.

இது பொதுமக்களுக்கு அறியத்தரும் ஒரு விளம்பரமாகும். முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்பாக விபரக்கோவையை பார்வையிடுமாறு அனைவரும் வேண்டப்படுகின்றீர்கள்.

A TM Company

டயலொக் டெலிகொம்

எதிர்காலம் இன்றே.